# வெள்ளி

1-8-72



# VELLI

News Magazine

30 சதம்

# தேவை

1. 'வெள்ளி'க்கு ஆசிரியப் பகுதியிலும், நிர்வாகப் பகுதியிலும் உதவியாளராகக் கடமையாற்றத் தகுதிவாய்ந்த ஒருவர் தேவை. பகுதி நேரமாகவும் கடமையாற்றலாம். யாழ்ப்பாண நகரப் பகுதியில் வசிப்பவர்கள் மட்டும் தமது தகுதி, முன் அனுபவம் முதலியவைகளைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்குக.

2. 'வெள்ளி' விளம்பரப் பகுதியைப் பொறுப்பேற்று நிர்வகிக்கவும், விளம்பரங்கள் சேர்க்கவும் ஒருவர் தேவை. பகுதி நேரமாகவும் கடமையாற்றலாம். கொழும்பு நகரில் வசிப்பவர்கள் மட்டும் தமது தகுதி, முன் அனுபவம் முதலியவைகளைக்குறிப்பிட்டுவிண்ணப்பிக்குக.

மேற்படி இப்பதவிகளுக்காகவும் விண்ணப்பிக்க வேண்டிய கடைசித் திகதி: 21-8-72. எழுத்து மூலம் மட்டுமே விண்ணப்பித்தல் வேண்டும். நேரில் வருதலும், தெரிந்தவர்கள் மூலம் தொடர்பு கொள்ள முயல்வதும் தகுதியீனங்களாகக் கணிக்கப்படும்.

நிர்வாகி, வெள்ளி,

226. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

# அன்புடன் சில வார்த்தைகள் ..................

'வெள்ளி' ஆசிரியர் கருத்து நல்ல கண்ணோட்டத்துடன் எழுதப்படுகிறது. பலரும் வியந்து பாராட்டுகிறார்கள். பிரச்சனைகளைக் காரணத்தோடு புரிய வைக்கிறீர்கள் . . . .

கொழும்பு-6. ஐ. த. சம்பந்தன்

நீலச்சேலையை எடுத்துக்கட்ட நினைத்தால் கொற்கை கிருஷ்ணனந்தனின் கவிதைதான் ஞாபகம் வருகிறது. இது போன்ற நல்ல கவிதைகளைத் தொடர்ந்து வெளியிடுங்கள்.

துன்னாலை. கே. ராஜேஸ்வரி.

ஈழத்துப் பத்திரிகை உலகிலே வெள்ளி ஒரு விடி வெள்ளி. 'பசுமை நினைவுகள்' போன்ற கட்டுரைகள் என் போன்றவருக்கு நல் விருந்து.

சாமிமலை. கனகு.

வெள்ளியை நான் படித்துவிட்டு இந்தியாவிலுள்ள நண்பர்களுக்கு அனுப்புகிறேன். அவர்கள் மிகவும் பாராட்டிக் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். குகதாசன் எழுதிவரும் அறிவுக்கட்டுரைகள்போல் இலங்கைப்பத்திரிகைகளில் இதுவரை வெளிவந்ததில்லை. தொடர்ந்து இக்கட்டுரைகளை வெளியிட்டு வாருங்கள்.

தலவாக்கொல்லை. ஆ. வி. மூர்த்தி.

மிகக் குறுகிய காலத்தில் மக்கள் மத்தியில் நல்ல செல்வாக்குப் பெற்றுக் கொண்டிருக்கும் வெள்ளியைக் கண்டு அகமகிழ்கின்றேன். மாதம் நான்கு இதழ்கள் மிக விரைவில் மலரட்டும்!

கட்டுப்பெத்தை. இரா.

'வெள்ளி'யில் எல்லா விஷயங்களுமே நன்றாயிருக்கின்றன. ஒவ்வொரு இதழிலும் ஒரு சிறுகதையைத் தவறாமல் வெளியிடுங்கள்.

பெல்மதுளை. இ. இராசையா.

முகப்புப் படம்

துள்ளி வருமொரு புள்ளி மயில் — நெஞ்சைக்
கொள்ளை யடித்திடுமே — என்னை
அள்ளி எடுத்திடுமே !

— ராஜா

# இதுவும் ஒரு வேண்டுதலே!

செந்தா மரை மலரே சிரித்துச் சிவந்திடுக
பைந்தேன் கனியமுதே பாகாய் இனித்திடுக
நந்தா விளக்கேநீ நாளெல்லாம் ஒளிசெய்க
அந்தோ, இவையெல்லாம் அழைத்தின்று கூறுவதே!

அன்னுய் உன்பிள்ளை தன்பால் அருள்செய்க
பொன்னே மணிகளே மின்னி ஒளிர்ந்திடுக
மின்னல் முழக்கமே மேலிருந்து வந்திடுக
என்னே, ஈதெல்லாம் எடுத்தியம்ப வேண்டுவதே!

காற்றேநீ வீசிடுக; கடலலையே ஆடிடுக
மாற்றேது மில்லாத மலையே உயர்ந்திடுக
கூற்றேநீ என்றென்றும் கூருமல் வந்திடுக
ஆற்ருதே, இவையெல்லாம் அழைத்திங்கு கூறுவதே!

கொடியே படருகநீ கோகிலமே கூவுகநீ
விடியாத இரவினிலே விண்மீன்காள் தோன்றிடுக
குடித்தாரை மதுவேநீ கூடிக் கெடுத்திடுக
கடிதேகொல், இவையெல்லாம் கற்பித்துக் கூறுவதே!

தண்ணீரே குளிருகநீ தழலேநீ சுட்டிடுக
கண்ணீரே துயர்தன்னைக் கரைத்து வடித்திடுக
பண்ணுர் தமிழினையே தமிழாநீ பழகிடுக
கண்ணே, இதுமெய்; இதுவுமொரு வேண்டுதலே!

— பாலா

வித்ததோடு இளைஞர் சங்க அங்கத்தினர்களின் சிறந்த விடயங்களையும் வெளியிட்டார் சிவபாதசுந்தரம். இருநூறுக்கும் மேற்பட்ட அங்கத்தவர்களைக்கொண்ட ஈழகேசரி 'இளைஞர் சங்கம்' என்ற அமைப்பை சிவபாதசுந்தரம் கட்டிக்காத்த வகை இருக்கிறதே. அற்புதம்! மகா அற்புதம்!



சோ. சி.

உங்கள் அன்பைப் பெருக்கி அறிவைப் புகட்டும் 'தாத்தா' 'பாட்டி' என சிவபாதசுந்தரமவர்கள் வாராவாரம் இளம் எழுத்தாளர்களுக்கு-முக்கியமானவர்களுக்கு - அறிவுரை பகருவார், பிழைகளைத் திருத்துவார். தட்டிக் கொடுப்பார். இளைஞர்களுக்காக அவர் எழுதும் நடை அழகாக இருக்கும். ஒரு உதாரணம் பாருங்கள். 'பாட்டி ஆஸ்பத்திரியில் இருந்த காலத்தில் நீங்கள் ஒருவரேனும் அவரது சுக துக்கங்களைப்பற்றி விசாரிக்கவும் இல்லையாம். எழுதவும் இல்லையாம்... அதனால் உங்களிடமிருந்து ஏதாவது செய்திகள் கிடைத்தாலன்றி உங்களைக் கண்டெடுத்தும் பார்ப்பதுமில்லை, ஒரு வரி கூட எழுதுவதுமில்லை என்று பிடிவாதமாய் இருக்கிறாள். நான் என்னால் இயன்ற அளவு உங்களுக்காக பரிந்து பேசினேன். ஏனென்றும் கேட்கவில்லை. உங்களால், வயது முதிர்ந்த இவ்வேளையில் குடும்பச் சச்சரவுகள் எங்களுக்குள் ஏற்படவும் கூடும். அப்படிச் செய்யாதீர்கள். நீங்களும் உங்கள் பாட்டியும் பட்டபாடு'!

திரு. சோ. சிவபாதசுந்தரம் அக்காலக் கட்டத்தில் 'கலாபவனம்' என்ற பகுதியில் இசை, நாடகம், நாட்டியம் பற்றிய குறிப்புகளையும். 'பாதை ஓரத்தில்' என்ற பகுதியில் அரசியல், பிரயாணங்கள் பற்றியும் எழுதியுள்ளார்கள். அருமையான சிறுகதைகளைப் பல புனைபெயர்களில் தீட்டியுள்ளார்கள். பிற்காலத்தில் வானொலி அதிகாரியாக இருந்து பல சாதனைகளை நிலை நாட்டியுள்ளார்கள். மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில், ஒலிபரப்புக் கலை, புத்தர் அடிச்சுவட்டில் முதலிய அழியாப் புகழ் பெற்ற நூல்கள் எழுதிப் பரிசும் பெற்றிருக்கிறார்கள். என்ன இருந்தாலும் எனது நினைவில் - ஏன் அக்கால இளம் எழுத்தாளர்களாக இருந்து இப்போது ஒளி வீசிக்கொண்டிருக்கும் எழுத்தாளர்களுடைய நினைவில் -'சோ.சி' அவர்கள் ஒரு இளம் பரம்பரையினரை வளர்த்து ஈழத்துக்குக்

# சோ. சிவபாதசுந்தரம்

ஈழநன்னாடு தமிழ் வளர்ச்சியில் - எழுத்துத் துறையில் தமிழ் நாட்டிலும் பார்க்கப் பின்தங்கி விடக்கூடாது என்ற ஆர்வத்தினால் உந்தப்பட்ட எழுத்தாளர் சோ. சிவபாதசுந்தரமவர்கள் ஈழகேசரியில் ஓரளவு பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன் தமிழ்ப் பத்திரிகை உலகில் அதுவரை நடந்திராத ஒரு புது முயற்சியை மேற்கொண்டார். அதுதான் ''ஈழகேசரி இளைஞர் சங்கம்'' என்னும் அமைப்பாகும். இன்றைய காலகட்டத்தில் அது பலருக்குப் புதுமையாகத் தோன்றாது. ஆனால் 35 வருடங்களுக்கு முன் - 1937 ஆம் ஆண்டு ஐப்பசித் திங்களில் - அது புதுமை. மிக மிகப் புதுமை.

அந்தப் புதுமையையும் தமது தெளிவான நோக்கத்தையும் வெளியிட்டு ''எங்கே பார்க்கலாம் உங்கள் கைவரிசைகளை!'' என்ற மகுடத்துடன் - 'பழைய பண்டிதர்கள் - புதிய எழுத்தாளர்கள் - தமிழ் உபாத்தியாயர்கள் - மாணவர்கள் - பெண்மணிகள் எல்லோருக்கும் ஒரு தூது'' என அருமையான ஒரு கட்டுரை எழுதினார். அக்கட்டுரையில் இளைஞர்களைப் பார்த்து ''தமிழை அழியவிடாது பாதுகாக்கவேண்டுமென்றால் இளம் எழுத்தாளர்கள் துணிவாக முன்வரவேண்டும்'' என்றும் தைரியம் கூறியிருந்தார். அந்தத் தூண்டுதலில் வந்தவர்களில் நானும் ஒருவன்.

வெறும் எழுத்தோடு வெறும் வாய்ச் சொல்லோடு, அவர் நிற்கவில்லை. இளைஞர்களுக்காக - அவர்களின் எழுத்தாற்றலை வளர்ப்பதற்காக - 'கல்வி அனுபந்தம்' என்ற மகுடத்துடன் நான்கு பக்கங்கள் ஈழகேசரியில் வெளியிடவும் செய்தார். (இப்போதைய சுதந்திரன் அளவில் அக்காலத்தில் பதினாறு பக்கத்தில் வாராவாரம் பத்துச் சதத்துக்கு ஈழகேசரியை வெளியிட்டவர் தமிழ்ப் பரோபகாரி திரு. நா. பொன்னையா அவர்கள். அவர்களைத் தூண்டி இளைஞர்களுக்காக - இளம் எழுத்தாளர்களுக்காக - இன்னும் நான்கு பக்கங்களைச் சேர்த்தார் திரு. சோ. சிவபாதசுந்தரம் அவர்கள், எனவே இருபது பக்கமுள்ள பத்திரிகை பத்துச் சதமாக விற்கப்பட்டது. கல்வியனுபந்தம் மாத்திரம் தனியாக மூன்று சதத்துக்கு விற்கப்பட்டது. இதுதான் ஈழகேசரியின் பொற்காலச் சேவை.

அந்தக் கல்வியனுபந்தத்தில் மாணவர்களுக்குத் தேவையான பல விடயங்களையும் தகுந்த பல அறிஞர்களைக் கொண்டு எழுது

இலக்கியச் செல்வர் கனக. செந்திநாதன்

கொடுத்த பெருமைதான் முன் னிற்கிறது.

அவர் ஈழகேசரி இளைஞர் சங்கமூலம், வளர்ந்தவர்கள் சாமானியப்பட்டவர்களல்ல.அ.செ முருகானந்தன், அ.ந. கந்தசாமி தி. ச. வரதராசன், வ. இராசையா, வ. நடராசா, ச. நமசிவாயம் என எண்ணிக்கொண்டே போகலாம்,

எப்படி வளர்த்தார் என்பது தான், முக்கியம். ஏனோதானோ என்று அலட்சியமாக அவர் ஒன்றையும் செய்வதில்லை. இதோ பாருங்கள் தி. ச. வரதராசனுக்கு அவர் எப்படிப் புத்திமதி கூறியுள்ளார் என்பதை:

தி. ச. வரதராசன் (168)

கதை நன்றாகத்தான் இருக்கிறது. தெரிவுசெய்யப்படாத தன் காரணம் அது எழுதப்பட்டிருக்கும் நடைதான். தென்னிந்தியாவில் பிராமணவர்க்கத்தினர் வீடுகளில் உபயோகிக்கும் பாஷை நடையைச் சில பத்திரிகைகளிலே கண்டுவிட்டால் நாமும் அதை ஏன் உபயோகிக்க வேண்டும்? நல்ல தமிழில் சாதாரண எளிய நடையில் அல்லவா எழுதவேண்டும்! உங்கள் சங்கத்திலே பத்திரிகை வாசித்தலையும் ஒரு நிகழ்ச்சியாக வைத்துக்கொள்ளலாம். பிரபல எழுத்தாளர்களாக வரலாமல்லவா?

என்னிடம் இருக்கும் பழைய ஆண்டுமலர்கள் தீபாவளி மலர்கள் பொங்கல் மலர்களை ஒரு தேவைக்காக மீண்டும் புரட்டுகிறேன்.

இதோ வரதர் புது வருஷ மலர் என் கண்ணிற் படுகிறது. 1950இல் வெளிவந்த மலர் அது. உள்ளே புரட்டிப் பார்க்கிறேன்.

''சிறு கதை கிடைத்தது. மகிழ்ச்சி. உமது எதிர்காலம் மிக நன்றாயிருக்குமென நம்புகின்றேன் என்றெல்லாம் பாராட்டுகள் மூலம் உற்சாகப்படுத்தி எழுதுவதில் எனக்கு ஆர்வமும் நம்பிக்கையும் தந்து ஆதரித்த திரு. சோ. சிவபாதசுந்தரம் அவர்களுக்கு'' என வரதர் அந்த அழகிய மலரைச் 'சோ. சி.' அவர்களுக்குச் சமர்ப்பணம் செய்திருப்பது கண்ணில் படுகிறது. ஆஹா, அந்தக் காலத்தில் இளம் எழுத்தாளர்களை ஈழகேசரி இளைஞர் சங்கமூலம் எப்படிச் 'சோ.சி.' உற்சாகப்படுத்தினார்! அதைச் சிலராவது நன்றி மறவாமல்—வெளிப்படையாகச் சொல்வதில் எவ்வளவு பெருமை கொண்டார்கள்! அந்தக்காலம் அந்தக் காலம்தான். வரதர் புது வருஷ மலர் காட்டிய பசுமை நினைவு அது! ●


வெள்ளி விற்பனையாளர்

பரந்தன்

ராஜன் நியூஸ் ஏஜன்சி.

நெல்லியடி

லட்சுமி ஸ்ரோர்ஸ்

பசறை

ஜெயம் ஸ்டோர்ஸ்

304, பிரதான வீதி.

கொச்சிக்கடை

எஸ். என். எஸ். ஐயாத்துரை

49, பஜார் வீதி.

■ 1847ல் சைமன் காசிச் செட்டி என்ற முதன் முயற்சியாளர் யாழ்ப்பாண அரசின் தோற்றம், வளர்ச்சி என்பன வற்றைக் குறித்து ஆங்கிலத்தில் நீண்டவொரு கட்டுரை எழுதியது முதல் யாழ்ப்பாண இராச்சியத்தைப்பற்றிய நல்லதொரு நூல் இன்றியமையாதது என்பதைப் பலரும் கூறிவந்துள்ளனர். சொல்லுவது யார்க்கும் எளிது; செயல்தான் கடினம். 1926ல் முதலியார் இராசநாயகத்தின் 'பண்டைய யாழ்ப்பாணம்' என்ற பெயருடைய ஆங்கில நூல் வெளிவந்தது. அது ஒரு மைல்கல். அதற்குப்பிறகு குறிப்பிடத்தக்க முயற்சிகள் எதுவும் இடம்பெறவில்லை. இப்பொழுது கல்வெட்டு ஆராய்ச்சிகளிலும், அகழ்வாராய்ச்சியிலும் முன்னின்றுழைக்கும் கலாநிதி கார்த்திகேசு இந்திரபாலா, 'யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம்' என்ற அரியதொரு நூலை ஆக்கி உள்ளார். யாழ்ப்பாணத் தொல் பொருளியற் கழகம் இச்சிறந்த நூலை வெளியிட்டுப் புகழ்தேடிக் கொண்டுள்ளது. பரிசுப்பதிப்பு ரூபா. 18-00 அப்பழுக்கற்ற ஆராய்ச்சி; அதற்கேற்ற நூலமைப்பு. —கை

■ பிரபல சினிமா கவிஞர் வாலி ஒரு சிறந்த ஓவியருமாவார். அவர் ஆர்வத்துடன் முறையாகப் படித்தது ஓவியக் கலையைத்தான். 'வாலி' என்ற அவருடைய புனைபெயர் கூட அந்தக் காலத்தில் ஆனந்த விகடன் ஓவியரான 'மாலி'யின் மீது ஏற்பட்ட கவர்ச்சியினால் வைத்துக் கொண்டதுதான்!

■ புதிய குடியரசுக்கு எதிர்ப்பு தெரிவித்து, தமது அரசாங்க உத்தியோகத்தைத்துறந்த கவிஞர் காசி ஆனந்தன் தம்மிடமுள்ள நிதிவசதியின் பலத்தை நம்பிப் பதவியைத் துறந்தவரல்லர். 'பத்து விரல்களை மட்டும் கொண்ட வெறுங் கைகளோடு நான் அலுவலகத்திலிருந்து வெளியேறுகிறேன்' என்று அவரே தமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். தமிழர் உரிமைப்போரில் தமது வாழ்வையே சமர்ப்பிக்க வந்த இவருக்கு ஒரு பாராட்டுவிழா நடத்தவும் பணமுடிப்பு அளிக்கவும் 'கவிஞர் காசி ஆனந்தன் பாராட்டு அவை' அமைக்கப்பட்டிருக்கிறது. பணம் அனுப்ப விரும்புகிறவர்கள் செ. சந்திரகாசன், 20, பெதிரிஸ் ரோட், கொழும்பு-3. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.—இந்த அவையின் தலைவராக வழக்குரைஞர் மு. பரராசசிங்கமும், செயலாளராக ஐ. தி. சம்பந்தனும் கடமையாற்றுகிறார்கள்.

■ சண்முகதாசன் கடந்த வருடம் சிறையிலிருந்த போது இரண்டு புத்தகங்களை எழுதி முடித்தார். சிறந்த அரசியல் தலைவர்களுக்கு சிறைவாசம் கிடைத்தால் நல்ல ஓய்வு கிடைக்கிறது. தெளிவாகச் சிந்திப்பதற்கும் எழுதுவதற்கும் சிறைச்சாலை அவர்களுக்கு மிகுந்த வாய்ப்பாக இருக்கிறது. சண்முகதாசன் தாம் எழுதிய கையெழுத்துப் பிரதிகளை வெளிநாட்டுக்குப் போகும் போது கையோடு கொண்டு போனார். அங்கே அவை அச்சாகிவிட்டன. இப்போது அவர் திரும்பி வந்த போது சில பிரதிகளைக்கொண்டு வந்தார். சுங்கப்பகுதி அவைகளைப் பறிமுதல் செய்துவிட்டது!

▮ அன்னுசிப் பழக் கோதுகளை இடித்து, அதிலிருந்து நாரெடுத்து, நூலாக்கித் துணி நெய்யும் முறை பிலிப்பைன் நாட்டில் பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. இந்த உடுப்புகள் உடலுக்கு மிக குளிர்ச்சியாக இருக்கின்றன என்று சொல்லுகிறுர்கள். இலங்கையிலும் அன்னுசிப் பழம் நிறைய விளைகிறது. அவற்றின் கோதுகளை நாங்கள் வீணுக்கிக்கொண்டிருக்கிறேம்.

▮ பொதுவாக மற்ற எல்லாக் கலைகளையும் ஒரு தனி மனிதன் செய்து விடலாம். இலக்கியத்தை ஒரு எழுத்தாளன் படைக்கலாம். ஓவியத்தை ஒருவனே தீட்டி விடலாம். இப்படியே நாட்டியம், சங்கீதம் முதலிய கலைத்துறைகளிளெல்லாம் ஒரு தனி மனிதன் உருப்படியாக ஏதாவது செய்யமுடியும். ஆனுல் சினிமாக்கலை இருக்கிறதே, அது 'பல்கலை'. பல கலைஞர்கள் ஒன்று சேர்ந்துதான் ஒரு சினிமாவை உருவாக்க முடியும்.

▮ சீனச் சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியில் சூடு ஏறுகிறது. சண்முகதாசன் இலங்கை திரும்பியதும் தம்மை 'வெளியேற்றிய' செய்தியைக் குறித்து 'நொன்சென்ஸ்' என்று அபிப்பிராயம் கூறியிருக்கிறுர். 'நொன்சென்ஸ்' சொல்லும் போது எதிரியை அசட்டை செய்வதாயிருக்கும்; கேலி செய்வதாயுமிருக்கும்; அளவு கடந்த ஆத்திரம் கொண்டதாயுமிருக்கலாம். சண்முகதாசனுடைய 'நொன்சென்ஸ்' எதைக் குறிக்கிறது?

▮ கடந்த ஆண்டினில் அரசாங்கத்துக்கு எதிராக நடைபெற்ற 'போருக்கு'ப்பிறகு நாடெங்கும் கோஷ்டிக்கொள்ளைகள் நடந்து கொண்டேயிருக்கின்றன. ஆயுதம் தாங்கிய கூட்டத்தினர் மோட்டார் வாகனங்களை மறித்து அடிக்கடி கொள்ளையடிக்கின்றனர். சமீபத்தில் ஒரு கடைத் தெரு முழுவதையும் பட்டப்பகலிலேயே இத்தகைய கோஷ்டி ஒன்று துப்பாக்கி முனையில் கொள்ளையடித்தது, பிரதான பாதையிலுள்ள ஒரு ரயில்வே ஸ்டேசனிலும் இத்தகைய கொள்ளை நடந்திருக்கிறது. இவையெல்லாம் எதைக்குறிக்கிறது? அரசாங்கத்தைப் பற்றிய 'பயம்' கொள்ளையர்களுக்கு இல்லாமல் போய்விட்டது. இந்த பயத்தை மறுபடியும் உண்டாக்குவது மிகவும் கஷ்டம். ஆயினும் அரசாங்கம் இத்தகைய நிகழ்ச்சிகளைத் தடுப்பதற்கு 'எல்லாவிதமான' நடவடிக்கைகளையும் உடனடியாக எடுக்க வேண்டும். இல்லையேல் அரசாங்கத்தின் மீது பொதுமக்களுக்கு நம்பிக்கையில்லாமல் போய்விடும். பொதுமக்களின் நம்பிக்கையை இழந்து ஒரு அரசாங்கம் வாழவே முடியாது!

▮ மேல் நாடுகளில் பெரிய நகரங்களையொட்டி நிர்வாண சங்கங்கள் இருக்கின்றன. வெளியுலகிலிருந்து மறைக்கப்பட்ட அதன் எல்லைக்குள் அதன் உறுப்பினர்கள் - ஆண்கள், பெண்கள் குழந்தைகள்-அனைவரும் பிறந்த மேனியாகவே இருந்து பொழுது போக்குகிறுர்கள். உலகின் மிகப் பெரிய நிர்வாண சங்கம் தென் பிரான்சில் இருக்கிறது. இந்தச் சங்கத்தில் சுமார் 14,500பேர் உறுப்பினர்களாகஇருக்கிறுர்கள்.

சமீபத்தில் சென்னையில் நடந்த தி. மு. க. ஊர்வலம் ஒன்றின் போது தி. மு. க. வின் எதிர்ப்பத்திரிகைகளான அலை ஓசை (தினசரி), குமுதம், கல்கண்டு அலுவலகங்கள் கூட்டத்தினரின் தாக்குதலுக்கு இலக்காயின. அலை ஓசை அதிபர் வேலூர் நாராயணனின் மோட்டார் வண்டி ஒன்றும் நாசமாக்கப்பட்டது! அந்த மோட்டார் வண்டி லேசுப்பட்டதல்ல. அது பெரிய சினிமா நடிகர், காதலிக்க நேரமில்லை என்ற தமிழ் படத்திலும் அதன் இந்திப்பதிப்பான 'பியாக்கியே ஜா' விலும் MSW 6959 என்ற இலக்கமுள்ள அந்தக்கார் நடித்திருக்கிறது. வேலூர் நாராயணன் அந்தக்காரை ஸ்ரீதரிடமிருந்து வாங்கியிருந்தார். ஸ்ரீதரிடம் இருந்தபோதுதான் அந்தக் காருக்கு நடிக்கும் வாய்ப்புக் கிட்டியது.

ஏவி. எம். ஸ்டூடியோவில் படப்பிடிப்பு இடைவேளையின் போது எல். ஆர். ஈஸ்வரி ஹிந்திப் பாட்டுப் பாடிக்கொண்டிருப்பதை சிவாஜி கேட்டார். பாடி முடிந்து ஈஸ்வரி அந்தப் பக்கம் வந்தபோது, ''என்னம்மா நீதானு இந்தியிலே சத்தம் போட்டுக்கொண்டிருந்தாய்? என்று சிவாஜி தமாஷாகக் கேட்டார். ''ஆமாண்ணே! காசைக் கொடுத்து சத்தம் போடும்படி சொன்னுர்கள். போட்டேன்'' என்று ஒரு போடு போட்டார் ஈஸ்வரி, சிரித்துக்கொண்டே!

சமீபத்தில் மரணமடைந்த பிருதிவிராஜ் 102 படங்களில் நடித்திருக்கிருர். கடைசிக் காலத்தில் இவர் நடித்த 4 படங்கள் முடிவடையவில்லை!

பிரிட்டிஸ் ராணி எலிசபெத்தின் ஒவ்வொரு அரண்மனையிலும் சிறிய சினிமாத் தியேட்டர்கள் இருக்கின்றன. வேறு முக்கிய அலுவல்கள் இல்லாவிட்டால் இரவுச் சாப்பாட்டின் பின் தினமும் இவர் ஏதாவது ஒரு படம் பார்க்கிருர். இத்தாலிய நடிகை சோபியா லோரனின் படங்களென்றுல் ராணிக்கு மிகவும் பிடிக்குமாம்.

தமிழ் நாட்டில் எம். ஜி. ஆர். சிவாஜி, ஜெயலலிதா முதலிய சினிமா நட்சத்திரங்களைப்பற்றிய செய்திகளை ரசிகர்கள் மிக ஆர்வத்துடன் படிக்கிருர்களல்லவா? பிரிட்டனிலுள்ள ரசிகர்களுக்கு அங்குள்ள சினிமா நடிகர்களைக் காட்டிலும் மிகவும் கவர்ச்சியான ஸ்டார்கள் பிரிட்டிஷ் அரச குடும்பத்தினர்தான்! பிரிட்டிஷ் இளவரசர், இளவரசி முதலியோரின் காதல் செய்திகளுக்கு இருக்கும் மவுசு வேறு எந்தச் சினிமா ஸ்டார்களைப் பற்றிய செய்திகளுக்கும் அங்கு கிடையாது!

டெல்லியில் மட்டுமே இயங்கிவந்த டெலிவிஷன் வரும் அக்டோபர் தொடக்கம் பம்பாய் பூனு ஆகிய நகரங்களிலும் இயங்கப் போகிறது. சென்னையிலும் டெலிவிஷன் அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டு இருக்கின்றன. மிக விரைவில் இந்தியாவின் முக்கிய நகரங்களுக்கெல்லாம் டெலிவிஷன் வந்துவிடும். முன்னேறிவிட்ட நாடுகளிளெல்லாம் டெலிவிஷன் வந்து விட்டது. இந்தியாயாவில் வளர்கிறது. இலங்கை டெலிவிஷன் எப்போது வருமோ!



யாழ்ப்பாணத்தவரான குகநாதன் சென்னை சினிமா வட்டாரத்தில் இப்பொழுது மிக 'பிஸி'யான பேர்வழி. ஜெயசங்கர் புதிதாக நடிக்கும் "இறைவன் இருக்கிறான்" என்ற படத்தின் கதைவசனத்தையும் குகநாதனே எழுதியிருக்கிறார். அமைதியாக, ஆனால் வேகமாக முன்னேறிவரும் நடிகர் ஜெயசங்கர்.

பொதுவாக எல்லாப் பழவகைகளுமே விரைவில் சீரணிக்கக் கூடியன. உடல் நலத்துக்கு ஏற்றன. ஆனால் வெள்ளரிப்பழம் மட்டும் லேசில் சீரணிக்காது. இதை அதிகம் உண்பதால் சிலருக்கு வாதக்குணமும் ஏற்படும். ஆனாலும் இந்த வெள்ளரிப்பழம் உடம்பின் வெம்மையைக் குறைத்துக் குளிர்ச்சிதரும்.

"அவசியமேற்படின், சிறுபான்மை இனத்தவருக்கு அவர்களுடைய நியாயமான கோரிக்கைகள் கிடைப்பதற்காக நான் உண்ணுவிரதமும் இருக்கத் தயங்க மாட்டேன்" என்று கூறியிருக்கிறார் ஒரு புத்தபிக்கு. இவர் சிங்கப்பூர் பல்கலைக்கழகத்தின் பௌத்த சங்க ஆலோசகர்: சிங்கப்பூரில் வாழும் தமிழர்கள் மலாய் மொழிபடித்து அரசியலில் அங்கம் வகிக்கும்போது, தங்கள் நாட்டு மொழியை ஏன் படிக்கக்கூடாது என்று கேட்கிறார் இவர். சிங்கப்பூர், தமிழர்களின் சொந்த நாடல்ல. தங்கள் சொந்த நாட்டிலேயே தங்கள் மொழி உரிமையை இழந்து நிற்பதுதான் தமிழர்களுக்குக் கவலையைத் தருகிறது!

தெலுங்கில் தயாரான பல ஸ்டன்ட் படங்கள் தமிழில் டப் செய்து வெளியிடப்பட்டிருக்கின்றன. இந்தப்படங்கள் சுமாராக ஓடி அந்தத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு நல்ல லாபமும் கிடைத்திருக்கிறது! ஸ்டன்ட் படங்களைப் பொறுத்தவரை நடிகர்களைவிட, தந்திரக் காட்சிகளே முக்கியம்!


**வெள்ளி** விற்பனையாளர்

**வெலிமடை**

நாதன் ஸ்டோர்ஸ்
2, என். எஸ். பியா வீதி.

**அக்கரைப்பற்று**

நண்பன் ஸ்டோர்ஸ்
பஸ் நிலையம்.

**கொடிகாமம்**

அ. நடராசா

புதிய அரசமைப்பில் தமிழ் மக்கள் உரிமைகள் பற்றி மௌனம் சாதித்து வந்த யாழ் மாநகரசபையும் இப்போது வாய் திறந்து விட்டது. பிரதமர் ஸ்ரீமாவோ, அரசமைப்புத்திட்டத்தில் தமிழர் உரிமைகளுக்கு வேண்டிய விதிகளைச் சேர்க்க வேண்டுமென்று இந்த மாநகர சபை கேட்டிருக்கிறது. இப்படி ஒரு பிரேரணையை சபைக்குக் கொண்டு வந்தவர் ஸ்ரீ. ல. சு. கட்சி உறுப்பினர்தான்!

அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தலைவராக ஒரு சிங்களவர் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நல்ல பயிற்சி உள்ள டி. எஸ். கே. வனசிங்க என்ற இவர், மட்டக்களப்பு கோட்டைமுனை தமிழ்ப்பாடசாலை ஒன்றில் தலைமை ஆசிரியராக பணியாற்றி வருகிறார். தமிழர்கள் சிங்கள மக்களையல்ல, சிங்கள ஆதிக்கத்தையே வெறுக்கிறார்களென்பதற்கு இந்த ஆசிரியர் சங்கத் தலைவர் தேர்தலும் ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

'ஹார்ட் அட்டாக்' என்று சொல்லப்படும் மாரடைப்பு நோயினால் இறப்பவர் தொகை இப்போது மிகவும் அதிகரித்து விட்டது. மாரடைப்பு ஏற்படப் போவதை முன் கூட்டியே தெரிவிக்கக்கூடிய ஒரு சிறிய கருவியை அமெரிக்காவில் இப்போது பரீட்சார்த்தமாக பலர் உபயோகிக்கிறார்கள். இந்தக் கருவி எச்சரிக்கை செய்ததும் உடனே நோயாளி வைத்தியரின் உதவியை நாடலாம்.


'ராதா சுவாமி' என்னும் மதப்பிரிவின் தாபகரான 'சுவாமிஜி மகராஜு'க்கு ஆக்ரா வுக்கு அருகே ஒரு நினைவு மண்டபம் எழுப்புகிறார்கள். 1907ல் ஆரம்பித்து, பின்னர் இடையில் சில காலம் நிறுத்தப்பட்டபின் மீண்டும் 1923ல் ஆரம்பிக்கப்பட்ட இந்த மண்டபவேலைகள் இன்னமும் சுமார் 50 வருடங்களாக நடந்து கொண்டிருக்கின்றன. உலகப் பிரசித்திபெற்ற தாஜ்மகாலுக்கு அண்மையில் அமைக்கப்பட்டுவரும் இந்த மண்டபத்தை அந்த தாஜ்மகாலுக்கு இணையாகக் கட்டிவிட வேண்டுமென்று பணத்தைக் கொட்டி நிர்மாணித்து வருகிறார்கள்.

ஹிந்திப்படவுலகின் தனிப்பெரும் கதாநாயகனாக ஒரு காலத்தில் விளங்கிய திலீப்குமார் அடுத்தமாதம் தந்தை ஆகப் போகிறார். நடிகை சயிரா பானுவை அவர் திருமணம் செய்து ஆறு வருடங்கள் ஆகின்றன. இப்போதுதான் குழந்தை பிறக்கப் போகிறது.



இந்தியாவுடன் நடத்திய யுத்தத்தில் தோல்வியுற்று கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் பாகிஸ்தானில் மொழிக்கலவரமும் உச்சநிலைக்குப் போயிருக்கிறது. இந்தி மொழிபேசுவோருக்கும் உருது மொழி பேசுவோருக்கு மிடையே மூண்ட இக்கலவரத்தில் பல உயிர்கள் பலியாகிவிட்டன. கலவரத்தை அடக்க முடியாமல் ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. மதவெறியை விட மொழி வெறிக்கு இப்போது சக்தி அதிகம்!

தமிழர் கூட்டணித் தலைவர்களில் ஒருவரான சாவகச்சேரி நவரத்தினம் இந்தியாவுக்குப் போயிருக்கிறார். அவர் கருணாநிதியைச் சந்தித்திருப்பதாகவும் செய்தி வந்திருக்கிறது. கிளிநொச்சி ஆனந்தசங்கரி லண்டனுக்குப் போயிருக்கிறார். தமிழர்களுடைய அரசியல் வாழ்வில் மிக முக்கியமான இச்சந்தர்ப்பத்தில், தலைவர்களுக்கு வெளிநாட்டுவேலைகள் முக்கியமாக இருக்கக் கூடாது. உள் நாட்டில் அவர்களுக்கு நிறைய வேலை இருக்கிறதே!



“ஈழத் தமிழர்களில் பெரும்பான்மையோர் புதிய அரசமைப்பை ஆதரிக்கின்றனர்.” என்று இனி ஒருவரும் சொல்ல முடியாது. பெரும்பான்மையென்ன, ஒரு கணிசமான அளவு தமிழர்கள்கூட இந்த புதிய அமைப்பை ஆதரிக்கவில்லை. தமிழர்களில் பெரிய கட்சியான தமிழரசுக் கட்சியும், தமிழ் காங்கிரஸ் கட்சியும் இந்த அரசமைப்பை எதிர்க்கின்றன. யூ. என். பி. யில் இருந்த இரண்டு எம். பி. களும்கூட இதற்கு எதிராக வாக்களித்திருக்கின்றனர், அரசாங்கப் பக்கமுள்ள வி. பொ. முதலியவர்கள் கூட இந்த அமைப்பு முற்றிலும் திருப்தியானதல்ல, ஆயினும் போகப் போக ஒத்துழைப்பின் மூலம் மீதி உரிமைகளையும் பெறலாம் என்றே கூறுகின்றனர். இதன் பிறகும் தமிழர்கள் இந்த அரசமைப்பை ஆதரிக்கிறார்கள், என்று எவராவது கூறினால்—அப்படிச் சொல்பவர்களுக்கு மனச்சாட்சி இருக்க வேண்டிய இடத்தில் வேறு என்னவோ ஒன்று இருக்கிறதாகவே கருதவேண்டும்.

வெந்நீரில் குளிப்பதை விட குளிர் நீரில் குளிப்பதுதான் உடம்புக்கு நல்லது. எப்போதாவது உடல் நலக்குறைவாக இருக்கும் போதும், கடும்குளிர் நாட்களிலும் வெந்நீரில் குளிக்கலாம். வெந்நீரில் குளிப்பவர்கள் எடுத்த எடுப்பிலேயே தலையில் ஊற்றக் கூடாது. முதலில் பாதங்களை நனைத்து, பிறகு கால்களை நனைத்து, அதன் பிறகு மார்பு வரை ஊற்றி, கடைசிலேயே தலையில் ஊற்றிக் குளிக்க வேண்டும்.

# நளினியின் நாயகன்

'வரதர்'

**முன்பு:** நள்ளிரவு 12 மணி, படுக்கையில் நித்திரையில்லாமல் புரண்டுகொண்டிருக்கிறாள் நளினி. திருமணமாகிச் சில மாதங்களே ஆகியிருந்த அவளுடைய கணவன் வேலாயுதம் ஏதோ அலுவலாக அன்று மாலைதான் யாழ்ப்பாணம் போயிருக்கிறான். அவன் ஒரு ஆஸ்த்மா நோயாளி. சூது விளையாட்டுக்குத் தன்னைப்பலிகொடுத்தவன்.

சுந்தரத்தின் கடிதத்தைச் சுற்றி நளினியின் எண்ணங்கள் படருகின்றன. அந்த நினைப்பில் அவளுக்கு ஒரு இன்பம். திருமணமான ஒரு பெண் அப்படி ஒரு கடிதத்தை வைத்திருப்பது தவறு என்று நினைத்து அதைச்சுந்தரத்திடமே திருப்பிக் கொடுத்து விடுவதென்று தீர்மானித்திருக்கிறாள். அவளுக்கும் சுந்தரத்துக்கும் திருமணப்பேச்சு நடந்த போது எழுதப்பட்ட கடிதம் அது. நளினியின் தகப்பனார், சின்னத்தம்பி, அவன் ஒரு 'கம்யூனிஸ்ட்' என்பதால் தமது மகளை அவனுக்குக் கொடுக்க விரும்பவில்லை.

காலையில் நளினியின் தகப்பனார் சின்னத்தம்பி யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருக்கிறார். பல வருடங்களாக ஒரு சுயேச்சை எம். பி. யாக இருந்த அவர் கடந்த 1970 தேர்தலில் தோற்றுப் போனார். அதனால் யாழ்ப்பாணத்தில் இருக்க வெறுப்புற்று, இந்திய யாத்திரை போய்வரத் தீர்மானிக்கிறார். அதற்கான 'பாஸ்போட்'டை எடுப்பதற்காக கொழும்புக்கு வந்திருக்கிறார். சுந்தரம் மூலமாக முயற்சித்தால் மிகச்சுலபமாகப் பாஸ்போட் கிடைக்குமென்று அவருடைய நண்பர் சொல்ல, சுந்தரத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொள்கிறார். அவன் வேண்டிய உதவிகளைச் செய்வதாகச் சொல்லி, பாஸ்போட்டை எடுத்து, மாலையில் வீட்டுக்குக் கொண்டுவந்து தருவதாகச் சொல்கிறான். அவனுடைய பெருந்தன்மையான குணத்தை முதன் முதலாகத் தெரிந்து மனம் நெகிழ்ந்து போகிறார் சின்னத்தம்பி. சுந்தரம் அன்று மாலையில் தங்கள் வீட்டுக்கு வரப்போவதை அறிந்த நளினி பரபரக்கிறாள். அவனுடன் எப்படிக்கதைப்பது, 'அந்தக்' கடிதத்தை எப்படிக் கொடுப்பது என்றெல்லாம் நெடுநேரமாகக் கற்பனை செய்கிறாள்.

அன்று மாலையில் சுந்தரம் வந்து, சின்னத்தம்பியிடம் பாஸ்போட்டைக் கொடுக்கிறான்.

சின்னத்தம்பி பாஸ்போட்டைப் புரட்டிப்பார்த்துக் கொண்டிருக்கிறார். நளினி பக்கத்திலிருந்த சிறு டீபோவை இழுத்து சுந்தரத்தின் பக்கத்தில் வைத்து விட்டு, அவனிடம் 'ட்றே'யை நீட்டுகிறாள். அவன் டீக்கிளாஸை எடுத்துக் கொண்டதும் டீபோயின் மீது ட்றேயை வைத்து விட்டு, எதிரேயிருந்த இன்னொரு நாற்காலியில் தானும் உட்கார்ந்து கொள்கிறாள்.

டீயை அவள் கொடுத்த போது, சுந்தரம் நிமிர்ந்து பார்த்து மெதுவாகச் சிரித்து 'தாங்யூ' என்று முணுமுணுத்த போது,நளினியும்மெல்லச்சிரித்த தன் மூலம் அவர்களின் அறிமுகம் ஆரம்பமாயிற்று.

சின்னத்தம்பி நிமிர்ந்து பார்த்துவிட்டு, ''ஓ, கோப்பியா, குடியுங்கோ தம்பி'' என்று உபசரிக்கிறார்.

நளினி சிரித்துக் கொண்டே, ''அது கோப்பியில்லையப்பா, டீ'' என்கிறாள். பிறகு சுந்தரத்தைப் பார்த்து, ''நீங்கள் கோப்பியோ, டீயோ எது குடிப்பியளெண்டு தெரியேல்லை, கோப்பியெண்டாச் சொல்லுங்கோ, டிக்காஷன் றெடியாயிருக்கு; உடனை கொண்டாறன்'' என்கிறாள்.

''பரவாயில்லை, இன்னது தான் குடிக்கிறதெண்டு எனக்கு வழக்கமில்லை. எது ஆப்பிட்டாலும் குடிப்பன்...''

நளினி சொல்கிறாள்: 'நான் 'மரி'பண்ண முன்னம் நெடுக டீதான் குடிக்கிறனான். ஆனால் 'இவ'ருக்கு கோப்பிதான் வேணும்.....நானும் கொஞ்சம் கொஞ்சமா கோப்பிக்கு மாறி விட்டன்.....''

சின்னத்தம்பி குறுக்கிட்டுச் சொல்கிறார்: ''கோப்பி சரியான மந்தம். டீ பறவாயில்லை. எங்க வீட்டிலை எல்லாரும் டீதான்!''

சிறிதுநேரம் மூவரும் மௌனமாக இருக்கிறார்கள். எதாவது பேசவேண்டுமென்று நளினி விரும்புகிறாள். ஆனால் என்ன பேசுவதென்று தெரியவில்லை.

''நீங்கள் எப்ப இந்தியாவுக்குப் பயணம்?'' என்று சுந்தரம் கேட்கிறான்.

''எப்படியும் ஒரு கிழமைக்குள்ளை வெளிக்கிட்டுவிடுவன். உங்களுடைய 'ஹெல்ப்'பாலை பாஸ்போட் வந்திட்டுது. நாளைக்கே விசா எடுத்துப் போட்டா, பிறகு பிளேன் டிக்கட் வாங்கவேண்டியதுதான்!''

''பால் குத்தவேணும்; 'இன்செக்சன்' போடவேணும். கூப்பன் புத்தகம் சறண்டர் பண்ண வேணும்.....''

''அதெல்லாம் றெடி; இங்கை வரமுன்னமே எல்லாம் செய்து போட்டுத்தான் வந்தனான்!''

''அப்பிடியெண்டால் ஒரு கிழமைக்குள்ளை நிச்சயமாய் புறப்பட்டு விடலாம்....சண்முகமையா சொன்னார், வடக்கை காசி வரையும் போகப் போறியளாம். கன நாளைக்கு நிப்பியளோ?''


''ஓம் தம்பி. இரண்டு மாசமெண்டாலும் நிண்டு விட்டு வாறதெண்டுதான்யோசிக்கிறன். இந்த எலக்சனோடை எனக்கு எல்லாம் வெறுத்துப்போச்சு...''

நளினி சிரித்துக்கொண்டே, வேடிக்கையாக் ''காசியிலே போய் துறவியாகி அப்பா அங்கேயே நிண்டாலும் நிண்டு விடுவார்!'' என்கிருள்.

சின்னத்தம்பியும் சிரித்துக் கொண்டே, ''அதுக்கென்ன நளினி; எனக்கும் அறுபத்தேழு வயசாகுது. கொம்மாவும் போயிட்டா; உன்னையும் கரைசேர்த்திட்டன்... இனிமேல் ஆத்மீகத் துறையில் போறதுதானே நல்லது?... (சுந்தரத்தைப்பார்த்து) ஆனு தம்பி, எனக்கு உந்தக்காவி உடுத்துச் சன்னுசியாப் போறதிலையெல்லாம் நம்பிக்கையில்லை. நல்லா வீட்டிலையிருந்து கொண்டே,கெட்ட செய்கைகளை,கெட்ட எண்ணங்களைத் துறந்தால் அதுதான் உண்மையான துறவு!... நீரென்ன நினைக்கிறீர் தம்பி?''

''உண்மைதான் ஐயா, ஆனுல் 'கெட்டது' என்ருல் எது கெட்டது? நீங்கள் கெட்டது என்று நினைக்கிறதையே இன்னெருத்தர் 'நல்லது' என்று நினைக்கலாமெல்லோ?''

''ஓமோம்'' என்ற சின்னத்தம்பி, சிரித்துக்கொண்டே, ''இந்த அரசியலை எடுத்துக் கொண்டாலே நீங்கள் 'நல்லது' என்ற நினைக்கிற கொள்கையளை நான் 'கெட்டது' என்று நினைக்கேல்லையே? நீர் சொன்னது மெய்தான் தம்பி. . . . ஆனு, ஒதுங்கி வாழுகிறதென்று நினைத்தா அரசியலையே முற்ருய்விட்டு விடவேண்டியதுதான் . . நான் இப்ப அப்படித்தான் தீர்மானிச்சுப் போட்டன். இந்தியாவுக்குப் போவிட்டு வந்து, நானுண்டு என்பாடுண்டு என்று பேசாமலிருக்கப் போறன். 'பிறருக்கு நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாமலிரு' என்ெருரு பொன்மொழி இருக்குதெல்லே? . . . அப்படிப் பேசாமலிருந்திட்டாத்தான் நிம்மதி!''



■ ''குறைந்த செலவில் வீடமைப்பு வசதிகள்'' என்ற விஷயம்பற்றி வானெலியில் பேச வரும்படி கட்டிடக்கலைஞர் துரைராசாவை வானெலித் தமிழ்ப் பகுதியினர் அழைத்தார்கள். 'வானெலியில் நான் உரையாற்றினுல் தமிழ் மக்கள் எல்லாரும் அதைத் தெளிவாகக் கேட்க முடியாது. உங்கள் ஒலிபரப்புச் சேவை அப்படி அமைந்திருக்கிறது. உங்களுடைய 60 ரூபாவுக்காக மக்களுக்குச் சரிவரப்பயன்படாத ஒரு பேச்சை நிகழ்த்துவதற்கு என்னுடைய நேரத்தை வீணுக்க விரும்பவில்லை' என்று அறிவித்து விட்டார் துரைராசா. 'குத்துவிளக்கு' படத்தை தயாரித்தவர் இவர். இன்னமும் இவரிடம் துடிப்பு இருக்கிறது!

"எலெக்சனேடை நல்லா விரக்தியடைந்திட்டியள் போலை யிருக்கு. அரசியலிலை இறங்கின உப்பிடி எத்தனையோ தோல்வி களுக்கு ஆயத்தமாயிருக்கவே ணும்......ஆன உங்களைப் பொறுத்தமட்டிலை உங்கடை முடிவை நான் சந்தோஷமா வரவேற்கி றன். உங்களைப்போல மற்ற ...''

மற்ற 'பிற்போக்கு வாதிகளும்' என்று சொல்ல வந்த சுந்தரம், வார்த்தையை மாற்றிச் சொல்கிறான். '......மற்ற பழைய கொள்கைக்காரர்களும் அரசியலை விட்டு விலகினல்தான் இந்த நாட்டுக்கு நல்லது... நான் இப்படிச் சொல்கிறதுக்குக் குறை நினையாதையுங்கோ...... இந்த விஷயத்திலை உங்களுடைய தீர்மானத்தை நான் ஆதரிக்கி றன்...''

''நான் நல்லா யோசிச்சுத் தான் இப்படி ஒரு தீர்மானத் துக்கு வந்தனான். எங்கடை காலம் போயிட்டுது. கிரேதாயுகம் போய், திரேதா யுகம் வந்த மாதிரி, இப்ப வேறை யுகம் வந்திருக்கு...''

நளினி இடை மறித்துச் சுந்தரத்தைப் பார்த்துச் சொல்கிறாள்: ''இப்பஅப்பாவினுடைய யுகம் முடிஞ்சுபோச்செண்டு சொல்லுறியள்; அவரைப்போல ஆட்களெல்லாம் அரசியல் துறவு பூணவேணுமெண்டு சொல்லுறியள்; அப்படியெண்டால், இன்னும் இருபத்தைஞ்சு வருசத்துக்குப் பிறகு நீங்களும் அரசியல் துறவு பூணுவியளோ?''

சுந்தரம் மிகத் தெளிவாகப் பதில் சொல்கிறான்: ''ஒருவருடைய உடலின் தளர்ச்சியாலை அரசியல் துறவுக்குக் காலம் வாறதில்லை. மனத் தளர்ச்சியாலைதான் வாறது. அது இருபத்தைஞ்சு வயசிலைகூட வந்துவிடலாம். என்னுடைய எண்பதாவது வயசிலையும் என்னுடைய அரசியல் கொள்கைகள்கிழடுதட்டிப் போகாமல் இளமையோடு —'இளமை என்று நான் சொல்கிறது விளங்குதெல்லே?–அந்தக் காலத்து மக்களினுடைய நன்மைக்குரியதாயிருக்குமானல், நான் ஏன் துறவு பூணவேணும்?'

சுந்தரத்தின் தெளிந்த கருத்தை ரசித்து, சின்னத்தம்பி தலையசைத்து மெதுவாகச் சிரிக்கிறார். 'இவன் நல்ல அறிவாளி தான்' என்று நினைத்துக் கொள்கிறார்.

நளினியும் சிரித்துக்கொண்டே, 'உங்களோடை என்னல் பேசமுடியுமோ?' என்று சமாதானம் சொல்கிறாள். அவனுடைய விளக்கம் அவளுக்கும் மிகத்திருப்தியாக இருக்கிறது. பிறகு திடீரென்று எதுவோ நினைவுக்கு வந்தவள்போல, 'சில பொம்பிளையள் தாங்கள் கலியாணம் முடிச்ச காலத்திலை என்ன பற்றனிலை சாறி உடுத்தினமோ, பிறகு நெடுக அதே பற்றனைத்தான்.... (தகப்பனரைப் பார்த்து)... எங்கடை கண்ணம்மா அன்ரியைக் கவனிச்சியளே அப்பா?.,. அவ இப்பவும் சாறியினுடைய முந்தாணியை இடுப்பை சுத்திக் கொண்டு வந்து பின்னலை 'பின்' பண்ணி விடுவா. அவவுக்கு அவ்வளவு வயசில்லை. ஆன பார்த்தா ஏதோ போன யுகத்துமனுஷி மாதிரியிருக்கும்...''

சுந்தரம் சிரிக்கிறான்: ''பொம்பிளையளுக்கு எப்பவும் சாறி ஸ்டயில்லைதான் கவனம்....''

"நான் சும்மா உதாரணத்துக்குச் சொன்னன். ஏன், எழுத்தாளர் 'பிரேம் சந்திர'னைப்பாத்தியளே, அவருடைய புனை பெயரைப் போலையே, அவருடைய கருத்துகளும் எழுதுகிற ஸ்டைலும் கிழடுதட்டிப் போச்சு! சும்மா பழையபேர்தான். அவர் எழுதாமலிருந்தால் நல்லாயிருக்கும்போலை கிடக்கு!''

சின்னத்தம்பி விஷயத்தை மாற்றுகிறார். "உங்களுக்கு இவர்- என்னுடைய மருமேனைப் பழக்கமே?'' என்று சுந்தரத்திடம் கேட்கிறார்.

"என்ன அப்பிடிக் கேட்கிறியள்? அவர் என்னுடைய நல்ல சினேகிதன். நேத்து ஊருக்குப் போறதாய்ச் சொன்னார். 'வீக் எண்ட்'டோடைதான் வருவார் போலை?''

நளினி ஆச்சரியத்துடன், "ஓ?...உங்களோடை இவர் நல்ல பழக்கமா? எனக்குத் தெரியாது....அப்ப நீங்கள் ஒரு நாளும் இந்தப் பக்கமே வரவேயில்லை?''

''அவரை ஓஃபீசிலை அடிக்கடி சந்திப்பன்...... இனிமேல் ஒரு நாளைக்கு வாறன்.... (சின்னத்தம்பியைப் பார்த்து) அப்ப நான் வரட்டே ஐயா? வேறை என்னவாலும் வேலை இருந்தால் சொல்லுங்கோ; செய்யிறன்'' என்று சொல்லிக்கொண்டே சுந்தரம் எழுந்திருக்கிறான்.

அவன் எழும்பவும் நளினிக்குத் தன் ரவிக்கைக்குள் கிடக்கும் கடிதத்தின் நினைவு வருகிறது. 'அப்பா அசையாமல் இருக்கிறாரே, என்ன செய்கிறது?'

சின்னத்தம்பியும் எழுந்து கைகுவித்து, ''தாங்யூ வெறி மச்'' என்று சுந்தரத்துக்கு விடை கொடுக்கிறார்.

சுந்தரம் கதவைத் திறந்து கொண்டு வெளியே கால் வைக்கவும்—

நளினி அவன் இருந்த இடத்துக்குப் போய், தகப்பனாருக்குப் பின்பக்கமாக மெதுவாகக் குனிந்து, ரவிக்கைக்குள்ளிருந்து கடிதத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, "மிஸ்டர் சுந்தரம்!'' என்று சுந்தரத்தைக் கூப்பிட்டுக் கொண்டு கதவடிக்குப் போகி



அண்ணாத்துரை இறந்த பிறகு அவரது குடும்பத்தினர் நிலைமையும் அண்ணாவை மட்டுமே நம்பி நின்ற நண்பர்கள் நிலைமையும் அவ்வளவு திருப்திகரமாக இல்லை. என்று சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் குறிப்பிட்டிருக்கிறார். கோவை மகேசன், கருணாநிதிக்கும், தி.மு.கவுக்கும் அனுதாபம் காட்டும் பக்கமுள்ளவர், அவரே இப்படி எழுதியிருப்பதை நம்பத்தான் வேண்டும்!

றுள். சுந்தரம் கதவுக்கப்பால் நின்று திரும்பிப்பார்க்கிறுன். நளினி தகப்பனுருக்குக் கேட்கத் தக்கதாக, "சீற்றிலே இந்த லெட்டரை விட்டு விட்டுப் போறியள்" என்று சொல்லிக் கொண்டே அவனிடம் அந்தக் கடிதத்தைக் கொடுக்கிறுள்.

"லெட்டரா!" என்று திகைத்த சுந்தரத்திடம் 'பேசாமல் கொண்டுபோங்கோ' என்று கிசு கிசுக்கிறுள் நளினி.

கடிதத்தை வாங்கியதும் உடனேயே இனங்கண்டுகொண்ட சுந்தரம் "ஓ, ஓ, நான் மறந்து போனன் தாங்யூ . . . நான் வாறன்" என்று சொல்லி விட்டுத் திரும்பி நடக்கிறுன்.

"வாறன் எண்டு சும்மா சொல்லாமல் 'அவர்' வரவிட்டிக்கு ஒரு நாளைக்குக் கட்டாயம் வாருங்கோ" என்று நளினி சற்று உரத்துச் சொல்லவும் சுந்தரம் திரும்பிச் சிரித்து கையை அசைத்து விட்டுப் போகிறுன்.

திரும்பி உள்ளே வந்த நளினியிடம் "சய், நான் எவ்வளவு பிழையா நினைச்சிட்டன். ஆள் கம்யூனிஸ்ட் எண்டாலும் அருமையான பொடியன்" என்று சின்னத்தம்பி சொல்கிறுர்.

நளினி அவர் பேச்சில் அதிகம் அக்கறை கொள்ளாதவள் போல, உள்ளே திறந்துகிடந்த அலுமாரியின் முன்போய் நிற்கிறுள். அவளையறியாமலே புடைவைகளைத் தூக்கி அந்தக் கடிதம் கிடந்த இடத்தைப் பார்க்கிறுள்.

ஏக்கம் நிறைந்த ஒரு நீண்ட பெருமூச்சு அவளிடமிருந்து வெளிப்படுகிறது.

## 4

அடுத்தநாள் காலை:

குசினிப்பக்கத்தில் ஏதோ வேலையாயிருக்கிறுள் நளினி.

"நளினி! நளினி!" என்று சின்னத்தம்பி முன்பக்கமிருந்து கூப்பிடும் குரல் கேட்கிறது.

"என்னப்பா?" என்று கேட்டுக் கொண்டே நளினி ஹோலுக்கு வருகிறுள்.

"இவ வந்திருக்கிறு. 'அவ'ரைப் பார்க்கவேணுமாம். என்னெண்டு கேள்!"

நாற்காலியில்உட்கார்ந்திருந்த பெண், "நீங்க வேலாயுத ஐயாவினுடைய சம்சாரமாதங்கச்சி?" என்று கேட்கிறுள்.

வந்திருப்பவளுக்கு சுமார் அறுபது வயதிருக்கும். கனத்த உடம்பு. முகத்திலே ஒரு மிடுக்கான தோற்றம்.

"அவர் யாழ்ப்பாணம் போயிருக்கிறுர். நான் அவருடைய மிஸிஸ்தான். என்ன அலுவல்? என்னட்டைச் சொல்லுங்கோ" என்கிறுள் நளினி.

வந்திருப்பவள் சிறிது தயங்குவதுபோலத் தெரிகிறது. பிறகு சின்னத்தம்பியின் பக்கம் பார்த்துவிட்டு, நளினியிடம், "என்னைப்பற்றி வேலாயுதம் ஐயா உங்களட்டை சொல்லியிருப்பாரோ தெரியேல்லை...நான்கொட்டாஞ்சேனையிலைஇருக்கிறனுன்... 'மரகதம்மா' என்று சொல்லுவினம்..."

நளினிக்கு இந்தப் பெயரைக் கேள்விப்பட்ட நினைவேயில்லை. மௌனமாக இருக்கிறாள்.

மரகதம்மா தொடர்ந்து, ''வேலாயுதம் ஐயாவிட்டைத் தான் ஒரு அலுவலாய் வந்தனான்...'' என்று இழுக்கிறாள்.

ஏதோ நல்ல விஷயமாக மனுஷி வரவில்லையென்று நளினிக்கு உள்ளுணர்வு சொல்கிறது. காய்ந்துபோன குரலில், 'விஷயத்தை என்னெண்டு சொன்னியளெண்டா...' என்கிறாள்.

மரகதம் குரலைச் சற்றுத் தளர்த்தி, ''உங்களிட்டைத் தனியாய்ச் சொன்னா நல்லது... அந்தப் பக்கம் உள்ளைபோய்க் கதைப்பமே?'' என்று எழுப்புவதற்கு உன்னுகிறாள்.

நளினிக்குச் சற்று எரிச்சலே வந்துவிடுகிறது. ''பறவாயில்லை. (சின்னத்தம்பியைக் காட்டி, அது என்னுடைய அப்பாதான். என்ன விஷயமெண்டாலும் இங்கையிருந்தே பேசலாம்'' என்று நளினி சொல்லவும், மரகதம்மா திரும்பவும் சரியாக உட்கார்ந்து கொண்டு, ''நான் இங்கை வரக் கூடாதெண்டுதான் இருந்தனான் தங்கச்சி. ஆனா வரவேண்டி வந்திட்டுது,'' என்ற பீடிகையோடு ஆரம்பிக்கிறாள். "நான் பிள்ளை பெரிய பணக்காறியில்லை; ஒரு கொஞ்சக் காசை வைச்சு அதை வட்டிக்குக் கொடுத்து, அந்த வட்டிக் காசிலைதான் சீவியம் நடத்திறனான்......''

வந்திருப்பவளின் விஷயம் நளினிக்கு ஓரளவு புரிந்து விடுகிறது. திரும்பித் தகப்பனாரைப் பார்க்கிறாள். அவரும் அறிந்து கொண்டவர் போல நளினியைப் பார்த்து விட்டு, திரும்பவும் கண்களைப் பத்திரிகையின் பக்கம் செலுத்துகிறார். ஆனால் அவருடைய காதும் மனமும் மரகதத்தின் பேச்சைக் கேட்கத்தான் ஆவலாயிருக்கின்றன.

---



இலங்கைப் பிரதமர் ஸ்ரீமாவோ சீனாவுக்கு விஜயம் செய்தபோது அங்கே நடந்த வரவேற்பு, பழைய கதைகளில் வருகிற நிகழ்ச்சிகளைத் தமக்கு நினைவூட்டியதாக, ஸ்ரீமாவோவின் மகன் அனுரா கூறியிருக்கிறார். 'பல வண்ண ஆடைகளை அணிந்த ஆண்களும் பெண்களும் பல்லாயிரக் கணக்காக வீதி ஓரங்களில் கூடி மகிழ்ச்சி ஆரவாரம் செய்த காட்சி மறக்க முடியாத ஒன்று' என்று பூரித்துப் போகிறார் அனுரா. பிரதமர் ஸ்ரீமாவோ சீனாவுக்குச் சென்ற அதே சமயம், சீன இளைஞர் கழகத்தினால் அழைக்கப்பட்ட அனுராவும் அங்கே இருந்திருக்கிறார்! தாயாரின் பெருமையைக் காண மகனுக்கும் ஒரு சந்தர்ப்பம் கொடுத்த சீனாவின் உணர்ச்சியைப் பாராட்ட வேண்டும்!

மரகதம் சொல்கிறுள்! ''எட்டுமாசத்துக்கு முன்னம் ஐயா என்னட்டை ஐந்நூறு ரூபா வாங்கினவர். மூண்டு மாசத்த வணைக்குள்ளே திருப்பித் தாற தெண்டு பேச்சு. பிறகு மூண்டு மாசம் கழியச் சொன்னுர், தனக்குக் கலியாணம் நடக்கப் போகுது, பிறகும் ஒரு இரண்டு மாசம் பொறுக்கச் சொன்னுர். ஆள் நல்ல ஒழுங்கான ஆள். பெரிய இடத்துப் பிள்ளை எண்டு எல்லாரும் சொன்னதிலை நானும் சரியெண்டு விட்டன். அதுக்குப் பிறகும் இப்ப இரண்டு மாச மாச்சு, ஒவ்வொரு மாசமும் 'வாற மாசம், வாறமாசம் எண்டு தவணையாய்க்கிடக்கு, போனமாசம் வட்டிக்காசும் தர யில்லை . . . நான் வேறை ஒரு ஆளுக்குக் காசு தாறனெண்டு ஐயாவினுடைய சொல்லை நம்பி வாக்குப் பண்ணிப் போட்டன். . . . இந்த மாசம் வட்டிக்காசு தராதத்திலை என்பாடு சீவியத் துக்கும் பெரிய கஷ்டமாயி ருக்கு . . .''

சின்னத்தம்பி, கையில் பிடித் திருந்த பேப்பரைச் சற்றுத் தாழ்த்திப்பிடித்து, மரகதம்மா வைப்பார்த்து, ''ஐந்நூறு ரூபா வுக்கு மாசம் வட்டி எவ்வள வணை?'' என்று கேட்கிருர்.

''நான் கண்டபடி வட்டி வாங்கிறதில்லை ஐயா, சிலபேர் எண்பது நூறெண்டு வாங்குவி னம். ஐயா எனக்கு மாசம் ஐம் பதுப்படிதான் தாறவர் . . .''

சின்னத்தம்பி நளினியைப் பார்த்து ''கேட்டியா நளினி? அங்கை உன்னுடைய காசு ஐநூறு ரூபாய்க்கு மாசம் அஞ்சு ரூபா உழைக்குது. இங்கை மரு மேன் ஐம்பது ரூபா கொடுக்கி ருர்!'' என்று சுடுகிருர்.

நளினி சிறிது நேரம் மௌ னமாக இருக்கிருள். நேற்று தகப்பனுர் வந்ததாலும், சுந்தரத் தின் நினைவுகளாலும் கிளுகிளுத் திருந்த அவளுடைய உள்ளம் இப்போது சோர்ந்து உறைந்து போகிறது. கணவனைப்பற்றிய கவலை அவள் நெஞ்சில் - அல்ல, உடல் முழுதுமே நிறைந்து விடு கிறது. எங்கேயோ யன்னல் பக் கம் கண்களைக் குத்திக்கொண்டு பேசாமல் இருக்கிருள்.

''நான் என்ன செய்யப் பிள்ளை?'' என்று மரகதம்மா கேட்கிருள்.


நளினி மரகதம்மாவைத் திரும்பிப்பார்த்து விட்டு, பிற கும் மௌனியாகவே யன்னல் பக்கம் பார்த்துக் கொண்டிருக் கிருள். வாயைத்திறக்க அவளு க்குப் பயமாயிருக்கிறது, எங்கே அழுகை பொத்துக்கொண்டு வந் துவிடுமோ என்று.

நளினி என்ன பதில் சொல் லப் போகிருளென்று ஒரு நிமி ஷம் காத்திருந்த சின்னத்தம்பி, ஒரு நிமிஷத்துக்கு மேலாகியும் நளினியின் குரலைக் கேளாததால் பேப்பரைத் தாழ்த்தி நளினி யைப் பார்க்கிருர்,

—தொடரும்.

▌ யாழ்நகர மண்டபம் குறித்து ஒரு பிரச்சினை எழுந்திருக்கிறது. அந்த மண்டபத்தை சினிமாத் தியேட்டராக உபயோகிப்பதற்காக, மாநகரசபை ஒரு கம்பனிக்கு வாடகைக்குக் கொடுக்க ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது. அதே மண்டபத்தில் அசைஸ் நீதி மன்றம் நடைபெற்றுக்கொண்டிருப்பதால், மண்டபத்தை விட்டுக் கொடுக்கும்படி பிஸ்கால் பகுதிக்கு அறிவித்தது. வடபகுதி பிஸ்கால் தலைவரான அரசாங்க அதிபர் இந்த அறிவித்தலுக்கெதிராக அமைச்சர்களுடன் ஆலோசனை நடத்துகிறார். மாநகரசபை மீண்டும் வற்புறுத்தினால் மண்டபத்தை அரசாங்கம் சுவீகரிக்கக் கூடுமென்றும் அவர் எச்சரித்திருக்கிறார். உரிமைப்பிரச்சினை ஒரு புறமிருக்க, வடபகுதி மக்களுக்கு ஒரு சினிமாத்தியேட்டரா, அல்லது அசைஸ் நீதிமன்றமா அவசியமென்பதை சம்பந்தபட்டவர்களும் அவதானித்து நடக்க வேண்டும்!

▌ பெட்ரோல் இல்லாமல் மின்சார பாட்டரிகள் மூலம் ஓடக்கூடிய ஒரு பஸ்வண்டியை இங்கிலாந்தில் லிவர்பூல் நகரத்தில் பரீட்சார்த்தமாக ஓடவிட்டிருக்கிறார்கள். தொடர்ந்து பல நகரங்களில் இத்தகைய பஸ் வண்டிகளை ஓட்டிப் பரீட்சிக்கப் போகிறார்கள். 26 பேர் மட்டும் பிரயாணம் செய்யக்கூடிய சிறிய பஸ்வண்டி இது. இந்த முறை வெற்றியளிக்குமானால் மோட்டார் வண்டிகளின் யுகத்திலேயே ஒரு புரட்சிகரமான மாற்றம் ஏற்படும்!



▌ சிவாஜிகணேசன் நடிக்கும் 70 எம். எம். படம் ராஜ ராஜ சோழன் வேகமாக வளர்ந்து வருகிறது. இந்தப் படத்துக்கான ஒரு கலைக்கோவிலை சமீபத்தில் வாசு ஸ்ரூடியோவில் அமைத்தார்கள். சுமார் 1000 தொழிலாளர்கள் 15 நாள்களுக்குமேல் வேலை செய்து இந்தப் பிரமாண்டமான 'செட்'டை அமைத்திருக்கிறார்கள். இந்த ஒரு 'செட்'டுக்கு மட்டும் ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் செலவாகியிருக்கிறதாம்!

▌ இரத்தினபுரியிலுள்ள கிரிமெனிக்கா என்ற ஏழைப் பெண்ணுக்கு ஒரு பெரிய இரத்தினக்கல் கிடைத்தது, சுமார் 1500 காரட் நிறையுள்ள அந்தக்கல்லை வாங்கும் தகுதி இலங்கையில் யாருக்கும் கிடையாது. இரத்தினக் கல் கூட்டுத்தாபனம் இன்னும் ஆறு மாதங்கள் கழித்து அதை வாங்கலாமென்று கருதுகிறது. ஆறுமாதங்களுக்குள், இரத்தினக்கல் வெட்டுவதற்கான நவீன யந்திரமும் பணமும் கூட்டுத்தாபனத்துக்கு வந்து விடுமென்று அதன் தலைவர் கருதுகிறார். விலைமதிப்பற்ற அந்த இரத்தினக்கல் இப்போது ஒரு வங்கியின் பாதுகாப்பு அறையில் தூங்கிக் கொண்டிருக்கிறது!

# ம
# ந்
# தி
# ர
# ம்

"மௌத்கல்யன்"

"ஹலோ, சியாமளா! நான்தான் நவீன சோஷலிச வாதி! 'அது'வே என்னுடைய தொழில். இதற்குள் என்னுடைய தொழிலைப்பற்றிப் புத்தியிருந்தால் புரிந்துகொண்டிருப்பீர்கள். பிறருடைய பணத்தை எடுத்து ஏழைக்கு - அதாவது எனக்கு - விநியோகிப்பவன். தமிழ்ப்பட ஹீரோவைப்போல் மற்றவர்களுக்கு வாரி வழங்குவதில்லை. ஆனால் அழகிய பெண்கள் இதற்கு விதிவிலக்கு. உங்களுடைய பாஷையில்—பார்வையில்—நான் ஒரு திருடன். அவ்வளவுதான்!

கண்ணே! முகத்தைச் சுழிக்காதே! ஏர்கண்டிஷன் அறையில் இருந்து கையெழுத்து இடுகிற சமாச்சாரமல்ல இது. கத்தி தெரியுமல்லவா கத்தி? அதைப் போல் கூர்மையாய் உறுதி உடம்பில் இருக்கவேண்டும். விரைவாய் செயல்படவும் வேண்டும்.

கதைகளில் வருவதுபோல் வாழ்வில் வருவது இல்லையல்லவா? அதனால் நான் திட்டம் போடாமல் செயல்களில் இறங்குவதில்லை. என்னுடைய அனுபவங்கள் தனி - ரசனை தனி- என்னுடைய திட்டங்களும் தனி. அதாவது என்னுடைய சினிமாப் படத்தில், டைரக்டரிலிருந்து எடுபிடி வேலையாள்வரை எல்லாமே நான்தான், சிநேகிதர் கூட்டம் இல்லை. - நன்றாக முடிந்ததும் "சிநேகிதி'கள் கூட்டம் சிறிது அதிகமாகும்.

இப்போது நான் 'அன்பு' கொண்டிருக்கும் இடம், அதோ தெரிகிற அந்த ஒழுங்கையில் இருக்கின்றது, மேற்குப் பார்த்த

நாலாவது வீடு. மதில் சுவருக்கு அரைவாசி பெயின்ட் அடித்திருக்கும்.

நான் இந்த வீட்டுக்கு, இதுவரை மூன்று தடவைபோய் வந்திருக்கிறேன், நோட்டம் பார்ப்பதற்காக. நாலுவீடு தள்ளி இருப்பவரின் விலாசத்தை, இந்த வீட்டிலே போய் விசாரித்தேன். -இரவு நேரத்திலே, வேறு 'மேக்கப்'பிலே, இரண்டாம் முறை: முனிசிப்பல் கௌன்சில் ஆள் போல், எல்லேச் சுவர் அளக்க வேண்டும் என்று ஒரு மத்தியான நேரத்தில், 'காக்கிச் சட்டை' இஞ்ச்டேப், பழையஃபைல், சகிதம் போனேன். மூன்ரும் தடவை நான்...

அதோ! அதோ!! வீட்டில் இருந்து வெளியே போகிருள் பார் ஒரு மனுஷி, அதுதான் 'அந்த' வீட்டுக்காரி. வயசு 37. ஆனல் அலங்காரம் 27 வயசுக்காக. பரவாயில்லே. அது சரி, இப்போது நேரம் என்ன பெண்ணே? ஓ கடிகாரம் ஓடவில்லேயா? இந்தக்காலத்துப் பெண்கள் போல் அதே அச்சாக இருக்கிருய். இரவு 11-30 மணிக்குத்தான் அங்கு வேலே.

'ஏன் இந்த வீட்டை மட்டும் குறிவைக்கிறேன்' என்கிருயா? பணம் இருக்கிறதல்லவா பணம்! அதில் இருக்கும் 'ண' வுக்கு மூன்று சுழி. இவர்களிடம் இருக்கும் பணத்திற்கோ ஐந்து சுழி. அவ்வளவு 'பெரிய' பணம். ஆனல் புழுத்த 'ஷைலக்'கேஸ். செலவழிக்கவே மாட்டார்கள். மதிலுக்கு எப்படித்தான் - அரைவாசியாவது - பெயின்ட் அடித்தார்களோ?



எம். ஜி. ஆர். இப்பொழுது மலேசியாவில் பினங் நகரத்தில் ஜெயபேரிகை கொட்டிக் கொண்டிருக்கிருர். பினங் நகரத் தமிழர்கள் நிறைய இருக்கிருர்கள். எம். ஜி. ஆருக்கு அங்குள்ள தமிழ் மக்களிடையேயும் மிகுந்த செல்வாக்கு உண்டு. அவர் பினங் நகர வீதிகளில் போகுமிடமெல்லாம் சனக்கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் பொலிசார் திணறுகிருர்கள்! எம். ஜி. ஆர் முன்பு இலங்கைக்கு வந்த போது சரோஜாதேவியுடன் வந்தார். இப்போது மலேசியாவில் ஜெயலலிதாவுடன் காட்சியளிக்கிருர்!

மேலும் சில விபரங்களே இதோ இந்த முடக்கில் இருக்கின்ற பெட்டிக் கடைக்காரனிடம் இருந்து அறிந்தேன். அதற்காக எவ்வளவு கஷ்டப்பட்டேன் தெரியுமா, காதலியே? கண்ணுடிக் கேஸிற்குள் இருந்த, நாள்பட்ட 'அல்வா'க்களே - பாண்டல் எண்ணெயினுல் செய்யப்பட்டவை - சிரித்த முகத்துடன் விழுங்கித் தொலேத்தேன். (இரண்டு நாள் வயிற்றுக் குழப்பமாயிருந்தது.) முக்கால் வீதம் அழுகிய வாழைப் பழங்களேச் சுவைத்தேன். ஊர்ச் சோடாக்களே உடைத்துக் குடித்தேன். காசுக்

கணக்கையும் தீர்த்தேன். இதனுல் கடைக்காரன் என்மீது அன்பு(!) கொண்டான். அவன் மூலம் சிறிது மேலோட்டம் அறிந்தேன்.

அறிந்தவை:- வீட்டுக்காரியின் புருஷன் எங்கோ 'கொட' என்று முடிசிற ஊரில் வேலை பார்க்கிருர். நான்கு கிழமைகளுக்கு ஒரு முறையாவது வருவதே கஷ்டம். மனுஷி, வெறும் வாய்க்காரர்களுக்கு 'அவல்' கொடுக்கிற விஷயங்களைச் செய்பவளாகக் கேள்வி. **10, 9** வயசில் இரண்டு ஆண்பிள்ளைகள். மனுசியினுடைய தம்பிக்காரன் ஒருவன் வீட்டுக்குத் துணையாயிருக்கிறுன். சரியான 'தண்ணி' டாங்.

அன்பே! விஷயத்திற்கு வருகிறேன். இன்னும் சுமார் மூன்று மணிநேரம் இருக்கிறது, என்னுடைய வேலை தொடங்க. அதுவரைக்கும் கொஞ்ச நேரம் - கொஞ்ச...

எங்கே போகிருய்? போகாதே. இரவிலே... தனியாக. துணையாக நானும் வரட்டுமா? ......அட! போய் விட்டாளே!

பரவாயில்லை! என்னருமை வாசகர்களே! நீங்கள் என்னுடன் வரலாம். அனைவரையும் அன்புடன் அழைக்கிறேன். பெண்களுக்குப் பிரத்தியேக 'இட' வசதி(!) உண்டு.

என்ன சொல்கிறீர்கள்? ஓ.. மூன்று மணித்தியாலங்கள் கழித்து வரப்போகிறீர்களா? அதற்கென்ன ஆறுதலாகக் காரியத்தைப்பார்ப்போம்.

சரி, நேரம் நெருங்கி விட்டது. புறப்படலாமா? ஷ்...சத்தம் செய்யாமல் வாருங்கள். இதோ வீடு வந்து விட்டது. பொறுங்கள். உடனே மதிலேறிக்குதிக்க அவசரப்படாதீர்கள். இரண்டு தரம் ரோட்டில் அங்குமிங்கும் நடந்து பார்ப்போம்.

என்ன கேட்கிறீர்கள்? மெல்லக் கேளுங்கள். அட! பிடிபட்டால் என்ன செய்யப்போகிருய் என்ருு? 'டோன்ட் வொறி.' ஒரு மந்திரம் வைத்திருக்கிறேன். அதை வாயால் இரண்டு தரம் சொல்வேன். நிலைமை மாறிவிடும். கலவரம் தொடங்கும். அதனுள்ளே புகுந்து தப்பிவிடுவேன். என்ன?...மந்திரத்தை இப்போதே சொல்ல வேண்டுமா? கொஞ்சம் பொறுங்கள். வெயிட் அண்ட் ஸீ.

இதோ, மதிலேறிக்குதிக்கப் போகிறேன். குதித்தாயிற்று. சத்தம் செய்யாமல் சின்ன எழுத்துகளில் நடந்து வாருங்கள். இது கிணற்றடி. இந்தப் பக்கமாய் வாருங்கள். அதிலே ஒரு சின்ன யன்னல் இருக்கிறது. அதன் முழுவேலை இன்னும் முடியவில்லை. அதனுல் இரண்டு கம்பிகள் மட்டும் மேலும் கீழும் இருக்கின்றன. (ஃபான் லைட் யன்னல் என்று நினைக்கிறேன்) யன்னலைக் 'கேட்டின்' துணியால் மறைத்திருக்கிருர்கள். அதனூடே கஷ்டப்பட்டு உள்ளே இறங்குகிறேன். (ஷா! நல்ல துணி! வீணுய்க் கிழிபட வேண்டியதாயிற்று.) சரி, நீங்களும் என்னைப் பின்பற்றுங்கள்.

ஒரு கேள்வி. காதல் நெஞ்சம் கொண்டவரே! நீங்கள் தமி

ழ்ப்படம் பார்ப்பவரா இல்லை, ஆங்கிலப்படப்பித்தரா? தமிழ்ப் பட விசிறிகள் இப்போது ''டடாய்ங், டடாய்ங்'' என்ற மியூஸிக்கைக் கற்பனை செய்து கொள்ளவும். ஆங்கிலப்படப் பித்தர்கள் ''டக், டக்'' என்ற என் காலடி ஓசையை மட்டும் கற்பனையில் கேட்டுக் கொள்ள வும்.

''டடாய்ங், டடாய்ங்''

''டக், டக்''

என்னுடைய 'பென் டோர் ச்லைட்' ஒளியில் நடந்து, ஹோ லில் இருக்கும் 'ஷோ' கேஸைத் தேடி, 'மாஸ்டர் கீ பஞ்ச்' இல் பிரத்தியேக சாவி ஒன்றை எடுத்து அதைத் திறக்க முனையும்போது,

டிக்!

ஹோல் முழுவதும் மின்சார வெளிச்சம் பரவுகிறது.

டடாய்ங் (பெரிதாக)! டடா ய்ங் (பெரிதாக)!

எனது கண் மிகவும் கூசிற்று. அதற்குள்ளே யாரோ என் இடது கையை இறுகப் பற்றினார்கள். (நீங்கள் எல்லோரும் என்னைக் கைவிட்டு விட்டுக் காற்றோடு காற்றாய்க் கலப்பது எனக்குத் தெரிகிறது.)

என்னுடைய கையைப் பற்றி யவன் - குண்டன்-சினிமாக்களில் சண்டைக் காட்சிகளுக்கு மட்டும் வருபவன் போலிருந்தான். அவ னுக்குப் பக்கத்தில் 'தண்ணி டாங்க்'—வீட்டுக்காரியின் தம்பி நின்றுகொண்டிருந்தான். நேர் எதிரே, உயரமாகக், கறுப்பாக பெரிய வண்டியுடன் சிறியதாடி யுடன் ஒருவர் நின்றார். யார் அவர்?

சாவிக் கொத்தைப் பிறர் அறியாமல் வலது கையினால் 'பொக்கட்'டினுள் வைத்தேன். பிறகு 'கையை' விடு என்று அந்தக் குண்டனிடம் முறைத் தேன்.

அவன் விட்டான்—

கையை அல்ல, உதையொ ன்றை!

முகம் சுவரில் அடிபடத்தக்க தாகச் சுவரோடு போய் மோதி னேன். வலித்தது. மெதுவாகத் தலையைத் தூக்கினேன். தலைக்கு மேலே ஒரு கல்யாணப் படம் தொங்கியது. அதில் வீட்டுக்கா



■ பானுரேகா இப்போது மிக வும் 'பிஸி'யாக இருக்கிறார் அவருடைய உடுப்புகளுக்கு அள வெடுப்பதற்குக் கூட அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று அவருடைய உடை தயாரிப்பாள ரான மீதாயூசுப் என்ற பெண் சொல்லுகிறார். பிரபல நடி கை புஷ்பவல்லியின் மகள் பானு ரேகா. இவரின் தந்தை இன்னும் பிரபல கதாநாயகனாகத் தமிழ்ப் படங்களில் நடித்துக்கொண்டி ருக்கிறார்.

ரியுடன், சிறிய (மீசை—தாடி) உடையவரும் இருந்தார். ஓ... இவரா இந்த வீட்டுக்காரர்?

'டேய் என்ன துணிச்சல் உனக்கு' என்று அவர் கேட்டார். 'ஹாஹ் ஹாஹ்ஹா' என்று சிரிக்காமல் கேட்டார்.

நான் என்னுடைய மந்திரத்தைச் சொல்லத் தயார் ஆகினேன். அநேகமாகப் பலிக்கக்கூடியது.

'எனக்கொன்றும் தெரியாது. உங்கடை 'மிஸ்ஸிஸ்' தான் என்னை இந்த நேரம் இங்கே வரச் சொன்னவ. என்னை விட்டு விடுங்கோ, இனி இங்காலிப் பக்கம் வரவும் மாட்டன். இதை ஒருவரிட்டையும் சொல்லவும் மாட்டன்' என்றேன் வேகமாக. (இதுதான் மந்திரம்)

சிறிய (மீசை—தாடி) யின் முக பாவனை சிவாஜிகணேசனைப் போல, உடனே மாறியது. 'இவனை கராஜ் ரூம்' இற்குக் கொண்டு போ' என்றார்.

குண்டன், கதாநாயகியை வில்லன் 'எதற்காகவோ' இழுத்துக்கொண்டு போவதைப் போல என்னை இழுத்துக் கொண்டு போனான். 'தண்ணி டாங்' சுவர்களைப் பிடித்தபடி நடந்து வந்தது. முன்னால் சிறிய (மீசை+தாடி) போனது.

'கராஜ் ரூம்' இற்குள் வந்ததும், 'என்ன சொன்னாய்'? என்று வீட்டுக்காரர் கேட்டார். நான் திரும்பவும் அப்போது சொன்னவற்றைச் சிறுது ஆறுதலாகச் சொன்னேன். (மறந்துவிட்டால் அதைத் திருப்பி ஒருமுறை படிக்கவும்)

இந்தமுறை 'ஹாஹ் ஹாஹ் ஹா' என்று சிரித்தார். நான் அப்போது சிரிப்பைப்பற்றி நினைத்ததைத் தெரிந்து கொண்டார் போல் இருக்கிறது.

''உன்னைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்'' என்று 'டாங்க்' குழறிற்று,

'டேய் மச்சான்! விஷயம் பிழை' என்று என்னுடைய மனசு சொல்லிற்று. மூளை வேலை செய்ய மறுத்தது.

''டேய், நீதானேடா என்னுடைய மனுஷியை ஒரு மாதகாலமாப் பின்தொடர்ந்து பல்லைக் காட்டிக் கொண்டு வந்தவன்? உன்னுடைய கரைச்சல் தாங்காமல் 'அவ' எனக்கு லெட்டர் போட்டா. அதனாலைதான் நான் லீவு போட்டிட்டு இங்கே வந்து நிற்கிறன். நான்தான் இண்டைக்கு இரவு உன்னை இங்கே வரச் சொல்லச் சொல்லி அவ விட்டே சொன்னனான். நீ எலி மாதிரி வந்து அகப்பட்டுவிட்டாய்'' என்று படபடவென்று பொரிந்து தள்ளினார் தாடி+ மீசை.

என்னுடைய மூளையில் 'ஃபிளாஸ் லைட்' மின்னிற்று. விஷயம் லேசாக விளங்கிற்று. யாரோ ஒருவனை - வீட்டுக்காரி பின்னால் சுற்றியவனை இன்று - இங்கே வரச்சொல்லி இருக்கிறார்கள். நான் திருட வந்ததும், என்னை,

'அவன்' என்று எண்ணிவிட்டார்கள். நான் தப்புவதற்காகச் சொன்ன பொய் — மந்திரம் — அவர்களை மேலும் நம்ப வைத்து விட்டது போலும்!

''ஐயோ! நான் களவெடுக்க வந்தனான். நீங்கள் சொல்லுகிற ஆள் வேறே யாரோ; நான் அவன் இல்லை. வேண்டுமென்றால் உங்கடை 'மிஸ்ஸிஸைக்' கூப்பிட்டுக் கேளுங்கோ'' என்று கத்தினேன்.

''அவவை இப்போது கூப்பிட்டுக் கேட்க முடியாது. உன்னை நன்றாகக் கேட்கிறோம்'' என்றார் வீட்டுக்காரர்.

மூவரும் கைகளை மடக்கிக் கொண்டு நெருங்கி வந்தனர்.

எனக்குக் கால்கள் தள்ளாடின.

என்னுடைய கதை........ முடிந்தது.

**வெள்ளி** விற்பனையாளர்

**இறக்குவானை**

நவ புத்தகசாலை,
180-ஏ, பிரதான வீதி,

**இரத்தினபுரி**

கே. வேலுப்பிள்ளை
223, பிரதான வீதி.

**பெல்மதுளை**

லிங்கம் ஸ்டோர்ஸ்
90, பிரதான வீதி.

**பலாங்கொடை**

சிட்டி ஸ்டோர்ஸ்
6, பிரதான வீதி.

**கொஸ்லாந்தை**

திருமகள் புத்தகசாலை,
பிரதான வீதி.

■ யாழ்ப்பாணப்பகுதிக் கோயில்களில் திருவிழா சீசன் ஆரம்பமாகிவிட்டது. அதைத் தொடர்ந்து ஆலயப்பிரவேசப் பிரச்சினைகளும் தொடங்கியிருக்கின்றன. திருவிழா தொடங்கிய உடனேயே ஆலயப் பிரவேசத்துக்கு எதிராக கோயில் கதவுகளை அடித்துப் பூட்டி விட்டார்கள் சில கோயில்களில். வடபகுதி பொலிஸ் அதிபர் சுந்தரலிங்கம் அந்தக் கதவுகளைத் திறந்து வைப்பதில் மிகத்தீவிரமாக இருக்கிறார். ஆனானப்பட்ட மாவிட்டபுரம் கோயிலே தனது கதவுகளை அகலத்திறந்து விட்ட பிறகு மற்றக் கோயில்கள் முரண்டு பிடிப்பதில் எவ்வித பயனுமிருக்காது! ●



எஸ். குமரேசன், யாழ்ப்பாணம்.

★ யூ.என்.பி.யின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

அரசாங்கம் செய்யும் ஒவ்வொரு காரியமும் யூ.என்.பிக்கு வாக்குத் தேடித்தரும் காரியமாகவே இருந்து வருகிறது! யூ. என். பி. ஒன்றும் செய்யாமல் சும்மா இருந்தாலே போதும்—அரசாங்க எதிர்ப்பு யூ. என். பி. ஆதரவாக-மாறி, யூ. என். பி.க்கு வெற்றி வந்து சேர்ந்து விடும்! இந்த உண்மை ஆட்சியில் உள்ளவர்களுக்கும் நன்கு தெரிந்து இருக்கிறது — அதனால் தான் நடத்தவேண்டிய பல உபதேர்தல்களை தொடர்ந்து தள்ளிப் போட்டுக்கொண்டு இருக்கிறார்கள்!

வ. தவபாலன், அச்சுவேலி.

★ படித்து என்ன பயன்? உத்தியோகம் கிடைக்கமாட்டாது என்பது நிச்சயம்!

படிக்காமல் இருந்தால் மட்டும் உத்தியோகம் கிடைக்கும் என்பது நிச்சயமா?

கேள்வி பதில்

"காமினி"



பொ. சிவனேசன்,
கொழும்பு—5.

★ இந்திரா - பூட்டோ பேச்சுவார்த்தைகளில் வெற்றி யாருக்கு?

இருவருக்குமே வெற்றிதான்! போரில் இந்தியா வெற்றி கொண்ட பிரதேசங்களை தன் வசம் மீட்பதற்கு, வழி செய்துவிட்டார் பூட்டோ! வெற்றி பெற்ற நாடாக இருந்தபோதிலும் மிகவும் பெருந்தன்மையாக நடந்து கொண்டதன் மூலம் இந்தியாவுக்கு ஆதிக்க ஆசை கிடையாது என்பதை நிரூபித்துக் காட்டிவிட்டார் இந்திரா! இந்திய உபகண்டத்தில் சமாதானம் நிலவுமானல் மிக விரைவிலேயே உலகப் பேரரசுகளில் ஒன்ருக இந்தியா வளர்வது தவிர்க்க முடியாததாக ஆகிவிடும்! இதற்கு வழி செய்திருக்கிறது சிம்லா உடன்படிக்கை!

கி. உதயகுமார்,
யாழ்ப்பாணம்.

★ இன்றைய இளஞ் சிறுர்களின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

நிச்சயமாக நமது நிலையை விட நன்ருனதாகவே இருக்கும்! இளைஞர்கள் உண்மைகளைப் புரிந்துகொள்ளத் தொடங்கிவிட்ட காலம் இது — எனவே எதிர்காலம் நல்ல காலமாக இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை!

ஜவாட் எம். யூசுப்,
பந்தாவ, பொல்காவலை.

★ பிரித்தானியச் சிறையி லிருந்து தப்பி இருக்கும் இலங்கை மாதாவை தமது வலை யில் விழச் செய்ய முயற்சிசெய்து வரும் நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா, சீனு, இந்தியா ஆகிய நாடுகளில் வெற்றி பெறப் போவது எந்த நாடு?

பெருத்த ஏமாற்றத்துக்கு ஆளாகப்போவது சீனு என்பது மட்டும் நிச்சயம்!

செல்வி சாந்தினி, மானிப்பாய்.


★ நான் க. பொ. த. உயர்தர வகுப்பில் படிக்கும் மாணவி. எனது ஆங்கில மொழி அறிவை விருத்தி செய்துகொள்ள விரும்பு கிறேன். ஓரளவுக்கு புத்தகங் களை வாசித்து விளங்கக்கூடிய ஆங்கில மொழியறிவு என்னிடம் உண்டு. நான் வாசிக்கும் புத்த கம் எனது அறிவு வளர்ச்சிக்கும் துணை செய்யவேண்டுமெனவிரும் புகிறேன். நான் வாசிப்பதற்கு ஒரு ஆங்கில நூலைச் சிபாரிசு செய்வீர்களா?

மறைந்த இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு எழுதிய Discovery of India என்ற புத்த கம் உமக்கு ஏற்றதாக இருக்கும் என்பது எனது அபிப்பிராயம்!

பி. கனகசபாபதி
வெள்ளவத்தை.

★ டட்லி — ஜே. ஆர் பிணக்கு சுமுகமாகத் தீர்ந்தது எத னைக் காட்டுகிறது?

அவர்களுக்கிடையில் பிண க்கு எங்கே இருந்தது! — அர



சாங்கத்துக்குள் ஊடுருவி ஆட் சியை திசை திருப்புவதற்காக ஒரு நாடகம் ஆடியது யூ. என். பி.! ஆனுல் மந்திரிகளில் ஒரு சிலர் மிகவும் உஷாராக இருந்த படியால் அந்த தந்திரோபாய நடவடிக்கையால் யூ. என். பிக்கு எவ்வித வெற்றியும் கிடைக்க வில்லை! இப்போது தங்கள் தந் திரோபாயத்தை மாற்றிக் கொண்டுவிட்டார்கள்!

செ. பப்ரிஸ்ற் அன் சற்குணம்,
யாழ்ப்பாணம்.

★ தினமணி கதிரில் கருணுநிதி பதில் அளிப்பது போல எங் கள் சந்தேகங்களுக்கு தமிழர் கூட்டணித் தலைவர்களான அமிரோ அல்லது உடுப்பிட்டிச் சிவாவோ பதில் அளிக்க எங்கள் 'வெள்ளி' மூலம் வழி அமைப் பீர்களா?

தமிழர் கூட்டணித் தலைவர் களுக்கு மட்டுமல்லாது அரசாங் கத்தை ஆதரித்து நிற்கும் தலை வர்களும்கூட வாசகர்களுடன் சுவையாகவும் சுருக்கமாகவும் உரையாடத் தயாரக இருந்தால் அவர்களுக்காக இரண்டொரு பக்

கங்களை ஒதுக்கித்தர 'வெள்ளி' தயாராக இருக்கின்றது!


செல்வி விசாலாட்சி மூக்கையா,
வத்துகாமம்.

✱ வைரத்தை வைரத்தால் தான் வெட்ட முடியும். அதுபோல வறுமையை வறுமையால் போக்க முடியுமா?

நமது அரசாங்கம் அப்படித்தான் நம்புகிறதுபோலத் தெரிகிறது! அரசாங்கம் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும் வறுமையை வளர்க்கும் நடவடிக்கையாகவே இருக்கிறது!

ந. சிவபாதசுந்தரம், நல்லூர்.

✱ காவலூர் எம். பி. பண்டிதர் கா. பொ. ரத்தினத்தை ஒரு சிறந்த தமிழறிஞர் என்றும் அவருடைய முயற்சி காரணமாகத்தான் 'அரசபணி' என்ற முத்



திரை தமிழில் இப்போதுகிடைத்திருக்கிறது என்றும் பகிரங்கமாக அமைச்சர் குமாரசூரியர் பாராட்டியிருக்கிருரே, பார்த்தீர்களா?

பார்த்தேன்! பண்டிதர் வல்லவர்; குமாரசூரியர் நல்லவர்!

க. சி. கணேசன்.
மகாவல்லை எஸ்டேட்.
(பரிசுக் கேள்வி)

✱✱ எல்லாத் தொழில்களுக்கும் லைசென்ஸ் வழங்குகிற அரசாங்கம் கொள்ளையடிக்கும் தொழிலுக்கும் லைசென்ஸ் வழங்கினல் என்ன?

உங்களுக்குத் தெரியாதா! கொள்ளையடிப்பதற்காக இப்போதும் பல தொழில்களுக்கு லைசென்ஸ் வழங்கியிருக்கிருர்களே!

மு. செல்வராசன்
கொழும்பு-13.

✱ ஸ்ரீமாவோவின் சீன விஜயத்தால் நமக்கு உண்மையிலேயே நன்மை கிடைத்திருக்கிறதா?

ஸ்ரீமாவோவின் தயவால் சீன மாவோவின் கடைக்கண் பார்வை ஸ்ரீலங்காமீது விழுந்து இருக்கிறது! ஸ்ரீமாவோ கத்தி முனையில் நடனம் ஆட முயற்சி செய்து இருக்கிருர்—கரணம் தப்பினல் மரணம் என்பது மாதிரியான நடனம் இது!

த. தங்கராசா, புத்தளம்.

✱ இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு விவசாயமா, கைத்தொழிலா சிறந்தது?

முக்கியமானது விவசாயமே. அதனல், கைத்தொழில் தேவையல்ல என்ற கருத்தல்ல.

சி. சிவநேசன், புங்குடுதீவு-3.

✱ புலவர் ஈழத்துச் சிவானந்தன் திருக்குறளை இலங்கையின் தேசிய இலக்கியமாக்க வேண்டுமென்று அமைச்சர் குமாரசூரியரைக் கோரியதுபற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன?

பாவம் திருவள்ளுவர்!

செல்வி. ராஜேஸ்வரி, களனி


★ என் தோழிக்கு தூக்கம் வர வில்லையாம். நன்ருகத் தூக்கம் வர என்ன செய்யவேண்டு மென்று கேட்கிருள்?

உமது தோழி பாடசாலைக் குச் செல்வதை நிறுத்திவிட்டார் என்று நினைக்கிறேன்! பாடசாலைக்குப் போய் ஆசிரியர் படிப் பிக்கும்போது பின்வாங்கில் சாய்ந்து படுத்தால் கிடைக்கும் நித்திரைச் சுகத்துக்கு சமமான சுகம் இந்த உலகத்திலேயே வேறு எதுவும் கிடையாது என் பதற்குச் சான்று பகர ஏராள மான மாணவர்கள் இந்த நாட் டில் இருக்கிருர்கள்!

இ. மாணிக்கரட்னம்,
கொழும்பு—6

★ கம்யூனிஸ்ட் கட்சி ஐக்கிய முன்னணியிலிருந்து விலகி ஞல் அவர்கள் தமிழரசுக் கூட் டணியுடன் சேர்ந்து உரிமைக் குரல் எழுப்புவார்களா என்ற எனது கேள்விக்கு எனது கம் யூனிஸ்ட் (கெனமன் சார்பு) நண்பர், ''நிச்சயமாக இல்லை'' என்று சொன்ஞர். அப்படி யாயின் உங்கள் 'ஒரு தேவ தூதன் வருவாஞ' என்று தலையங்கத்துக்கு பதில் கிடைத்துவிட்டதல்லவா?

கம்யூனிஸ்ட் கட்சி கூட்டு முன்னணி அரசிலிருந்து விலகி ஞலும், தமிழர் கூட்டு முன்னணி யில் நிச்சயம் சேராது. ஆனல் அவர்களுடைய தமிழர் உரிமை குறித்த குரலில் நிச்சயம் வலிமை ஏற்படும்!........'தேவதூதன்' வருகைக்கு இன்னமும் வாய்ப்பு இருக்கிறது.



எஸ். நாராயணசாமி, கண்டி.

★ தமிழ் நாட்டில் என்ன நடை பெறுகிறது?

கருணுநிதி தலைமையிலான தி. மு. க அரசைக் கவிழ்ப்பதற் கான உச்சகட்ட நடவடிக்கைகள் இப்போது நடந்துகொண்டிருக் கின்றன! இந்த முயற்சியிலும் அவர்கள் ஏமாறத்தான் போகி ருர்கள். — கருணுநிதியை இப் போதைக்கு யாருமே அசைக்க முடியாது!



# இலக்கியமும் திறனய்வும்

**கலாநிதி க. கைலாசபதி**

ஆசிரியர்களுக்கும், ஆசிரி யகலாசாலை மாணவர்களுக் கும், இலக்கிய நோக்குடைய பிறருக்கும் மிகவும் பயன்தரும் நூல். ரூ. 3-80 (தபால் செ லவு சதம் 60)

வரதர் வெளியீடு

226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.



நடுவில் எம். பி. தர்மலிங்கம் தமது கார் இலக்கத் தகட்டில் ஸ்ரீ எழுத்துக்கு மேலே தமிழிலும் பெரிதாக 'ஸ்ரீ' போட்டு இலக்கங்களை எழுதிப் பதித்திருக்கிறார். இது ஒரு சட்ட மறுப்பாக இருக்காது. சிங்கள ஸ்ரீ'யை மறைத்தால்தான் சட்ட விரோதமாகும்! ஆனாலும், மக்களிடையே தமிழுணர்சியைத் தூண்டுவதற்கு இது உதவும்!

நகைத் தொழில் செய்பவர்களுக்கு ஒரு சிறு அளவான பவுணை அரசாங்கம் 'பேமிற்' மூலம் வழங்கிவருகிறது. ஆனால் இம்முறை யாழ்ப்பாணப் பகுதியில் மட்டும் 55 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இந்தப் 'பேமிற்' கொடுக்கவில்லை. தனிப்படச் சொந்தமாகத் தொழில் செய்பவர்களும் 55 வயதுடன் ஓய்வு பெற்றுவிட வேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறதா? மிக நல்லதுதான். ஆனால் அப்படிக் கருதுகிற அரசாங்கம் 55 வயது ஆனவர்களுக்கெல்லாருக்கும் 'பென்ஷன்' கொடுக்க வேண்டும்!

நடிகை லட்சுமியின் கணவருக்கு சிவாஜியின் நடிப்பு மிகவும் பிடிக்குமாம். சிவாஜியுடன் காதல் காட்சிகளில் உணர்ச்சி வசப்பட்டு லட்சுமி இணைந்து விடும் காட்சிகளையும் அவர் ரசிக்கிறாரா என்று தெரியவில்லை. ஒரு நடிகையைத் திருமணம் செய்கிறவர் இந்தமாதிரி ரசனைகளுக்கெல்லாம் பக்குவப்பட்டவராகத்தான் இருக்க வேண்டும்!

பெருகி வரும் நுளம்புகளை அழிப்பதற்கு நீர் நிலைகளில் டி. டி. ரி, யைத் தெளிப்பது தான் இப்போதைய வழக்கம். டி. டி. ரி. தெளிப்பதால் தண்ணீரும் அதன் சுற்றாடலும் பாதிக்கப்படுகின்றன. டி. டி. ரி. யின் அழிப்பு சக்தியைமீறி நுளம்புகளும் உயிர்வாழ இப்போது பழகி விட்டன. ஆகவே டி.டி.ரி. யால் பயனில்லை. நுளம்புகளை முற்றாக அழிக்கக் கூடிய ஒருவகைக் கிருமிகளைப் பிரிட்டிஷ் கிருமிஆராய்ச்சி நிலையம் கண்டு பிடித்திருக்கிறது. இந்தக் கிருமிகளை தேங்கி நிற்கும் நீர் நிலைகளில் வளர்த்து விட்டால் அவை நுளம்புகளை முற்றாக அழித்து விடுகின்றன. இக்கிருமிகளால் மனிதர்களுக்கு எவ்வித ஆபத்தும் நேராது.

இலங்கையில் இடதுசாரிக் கட்சிகள் எப்பொழுதுமே இளைஞர்களைத் தங்கள் பக்கம் சேர்த்துக் கொள்வதில் ஆர்வம் காட்டி வந்திருக்கின்றன. ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியும், யூ. என். பியும் சில வருடங்களுக்கு முன்னால் இளைஞர்கள் மீது கவனம் செலுத்தத் தொடங்கின. தமிழர் கட்சிகள் இப்போது தான் இளைஞர்களைப்பற்றி தீவிரமாகக் கவனமெடுக்கத் தொடங்கியிருக்கின்றன. தமிழ்ப்பகுதிகளிலும் இளைஞர்கள்—மாணவர்களின் சக்தி பெரிதாக இப்போது கணிக்கப்படுகிறது!




அச்சிட்டு வெளியிட்டவரும், ஆசிரியரும்: தி. ச. வரதராசன்
அச்சுப்பதிவு : ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.